# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, மாசி 21உ (4—3—73) ஞாயிறு முஹற 28 — புத்தகம் 26 இதழ் 13


## அண்ணா தி. மு. க. ஆதரவு நல்கும்!

அண்ணா திராவிட முன்னேற்றக்கழகங்களும், எம். ஜி ஆர். மன்றங்களும் இணைந்து தமிழர் கூட்டணி உறுப்பினர்களுக்கு தேர்தல் காலங்களில் ஆதரவு தேடுவதுடன், தமிழர் கூட்டணி நடத்தவிருக்கும் போராட்டங்களில் தீவிரமாக பங்கு கொள்ளும் என்று யாழ்ப்பாணம் அ. தி. மு. கழகச் செயலாளர் ஏ. எஸ். பரமநாதி வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அண்ணாவின் வழியைப்பின் பற்றுவோர் சிங்கள வகுப்பு வாதிகளின் கம்யூனிஸ்ட் கட்சியோடு சேர மாட்டார்கள் என்றும் எம். ஜி. ஆர். தமிழ் மீதும், எமது தமிழ்த்தலைவர்கள் மீதும் வைத்திருக்கும் பற்றும் மாறப் போவதில்லை எனவும் சுதந்திரன் நிருபரிடம் அவர் மேலும் கூறினார்.

# ‘திரும்பிப் போ!’

## ராஜபக்சவுக்கு எதிராகக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம்!

## விமான நிலைய வரவேற்பு ரத்து!

### எதிர்ப்புக்கோஷம் வானைப்பிளந்தது!

சிங்கள அரசாங்கத்தின் மீன்பிடி அமைச்சர் ஜோர்ஜ் ராஜபக்ஸ அவர்கள் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கியபோது, ‘திரும்பிப் போ’ என்று கோஷமெழுப்பியபடியே சுமார் 1500 தமிழர் கூட்டணித் தொண்டர்கள் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அமைச்சர் விமானத்திலிருந்து இறங்கி விமானத் தளத்தில் காலடி வைத்ததும் எதிர்ப்புக் கோஷம் வானைமுட்ட, எங்கும் கறுப்புக்கொடிகளாகவே காட்சியளித்தன. திடீரென ஏற்பட்ட இக்களேபரத்தினல், அமைச்சருக்கு விமான நிலையத்தில் வைத்து வரவேற்பு அளிக்க இருந்த அரசாங்க ஆதரவாளர்களால், அதை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. இதனல் விமான நிலைய வரவேற்பை இரத்து செய்துவிட்டு விமான நிலையத்திலிருந்து அமைச்சரும், அவரது எடுபிடிகளும் ‘விசுக்’கென்று சென்றுவிட்டனர்.

அமைச்சரும், அவரை வரவேற்க வந்திருந்த தமிழ் துரோகிகளும் அங்கிருந்து செல்லும்வரை எதிர்ப்புக் கோஷத்தை மக்கள் எழுப்பிக்கொண்டேயிருந்தனர்.

திரு. ஜோர்ஜ்ராஜபக்சா, 1-3-73 காலை 9.45 மணக்கு விமான நிலையத்தில் வந்திறங்கினர். அவரை வரவேற்பதற்கென அரசாங்க எடு

(7-ம் பக்கம் பார்க்க)

### சிங்களத் திணிப்பை எதிர்த்து

## சட்ட மறுப்புக்கு தீவிர ஏற்பாடுகள்!

புத்தூர் பஞ்ஞசீக பாடசாலையில் முதலாம் வகுப்பில் படிக்கும் தமிழ் பிள்ளைகளின் கல்விப்போதனு மொழியாக சிங்களத்தை திணித்துள்ளதையும், பௌத்தமதத்தை கட்டாய பாடமாக்கியுள்ளதையும் எதிர்த்து சட்ட மறுப்பு இயக்கத்தை தொடங்குவதற்கு தமிழர் கூட்டணியின் சார்பில் கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை சகல ஏற்பாடுகளையும் செய்துவருகிறார்.

இப்பிள்ளைகளுக்கென தமிழைப் போதனுமொழியாக கொண்ட தமிழ்ப்பாடசாலையொன்றை தனியே நடத்துவதுதான் இச்சட்டமறுப்பு இயக்கமாகவிருக்கும்.

பள்ளிக்கூடங்களை தனியார் ஆரம்பிப்பதை இப்போதைய கல்விச் சட்டம்

(7-ம் பக்கம் பார்க்க)

## சோஷலிசமாம் சோஷலிசம்..!

“பல்கலைக்கழக அனுமதி வழங்குவதில் தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். பேராதனை, கட்டுபெத்தை பொறியியல் துறைக்கு உள்ள 275 வெற்றிடங்களைபெற175க்கு மேற்பட்ட மாணவர்கள்போதிய புள்ளிகள் பெற்றுள்ள போதிலும், பிராந்திய ரீதியாக தெரிவு நடக்கும், மொழிவாரியாகத் தெரிவு நடக்கும் என்று கண்துடைப்பு நடத்தி, 35 தமிழ் மாணவர்கள்மட்டுமே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மீதிப் பேர் அனுமதி மறுக்கப்பட்டு நட்டாற்றில் தள்ளப்பட்டுவிட்டனர். இதற்கு பெயர்தானு சோசலிசம்?”

—அளவெட்டியில் நாவலர் அமிர்.

## பீட்டர் கெனமனின் அமைச்சில் தமிழுக்குக் கொள்ளி வைப்பு!

## ஆனல் ஆங்கிலத்துக்கு மட்டும் இடம்!!

கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரே அமைச்சரான வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் பீட்டர் கெனமன் அவர்களது நேரடி நிர்வாகத்திலேயே தமிழ் மொழி ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்கப் பட்டு, வருகிறது!

வி. பொன்னம்பலமும் மற்றும் தமிழ் கம்யூனிஸ்ட்டுகளும் வடக்கே நின்று தமிழுக்கு உரிமை தருவோம்—பிரதேச சுயாட்சி தருவோம், என்று வாய் வலிக்கக் கத்தி தமிழ் மக்களை ஏமாற்ற முயன்று வருகின்றனர். ஆனல் அவர்களது குட்டை பீட்டர் கெனமனின் அமைச்சு செயல் மூலம் உடைத்து காட்டி வருகிறது.

பீட்டர் கெனமனின் அமைச்சில் தமிழுக்கு துளியும் இடமின்றி ஒதுக்கப் பட்டு வருவதுடன், சிங்களமும் ஆங்கிலமுமே கொடி கட்டி ஆளுகின்றன. வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதாக வாயளவில்

(7-ம் பக்கம் பார்க்க)


## புதிய உத்தி!
## புதிய பாணி!!
## புதிய நாவல்!!!

- அத்தியாயத்துக்கு அத்தியாயம் விறு விறுப்புக் கொண்டது.
- உள்ளத்தை உருக்கும் உணர்ச்சிமயமான திருப்பங்கள்!
- உண்மைக் காவியம் இது!

## ராதையின் நெஞ்சம்

18-3-73 சுதந்திரனில் ஆரம்பமாகிறது!!

உங்கள் பிரதிக்கு உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.


## அரிசிவிலை உயர்வை ஆட்சேபித்து

# ஹர்த்தால்!

### தமிழர் கூட்டணி அவசரமாககூடுகிறது

அரிசி விலை உயர்த்தப்பட்டதை எதிர்த்தும்—ஏனைய பொருட்களின் விலைவாசிகள் உயர்த்தப்பட்டதைக் கண்டித்தும், பொது ஹர்த்தால் ஒன்றை நடாத்த தமிழர் கூட்டணியின் உயர் மட்டத்தில் ஆலோசிக்கப் பட்டுவருகிறது.

இந்த உத்தேச ஹர்த்தாலை [illegible] பொறுப்பான நிதியமைச்சர் டாக்டர் என்.எம். பெரேரா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கும் இத்திங்கள் 10-ம் நாள் நடத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் பற்றியும் கூட்டணியின் உயர் மட்டத்தில் தற்போது ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

இது பற்றிய இறுதித் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக, கூட்டணி நடவடிக்கைக் குழுவின் அவசரக்கூட்டம் ஒன்று இன்று (4.3.73) யாழ் நகரிலுள்ள கூட்டணி செயலகத்தில் நடைபெறுகிறது.

இது சம்பந்தமாக கூட்டணி நடவடிக்கைக் குழு உறுப்பினர்களுக்கு அனுப்பப் பட்டுள்ள அவசர அழைப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

“தமிழினத்தின் உரிமைகளைப்பறிக்க புதிய அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்ட

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரல்

# சிங்கள ஆட்சியாளரின் காலை நக்கும் சுயநலக் கிருமிகளே! எச்சரிக்கை!

## உங்களைத் தமிழினம் அடையாளம் கண்டுவிட்டது!

27.1.73ல் குறுக்கு வழியில் அரசியலில்லாபம் தேடிடும் அல்பிரட் துரையப்பா தலைமையிற் கூடிய ஸ்ரீ. ல. சு. கட்சியின் யாழ். கிளை, எதிர்க்கட்சியைச் சார்ந்த தமிழ்த்தேசிய பேரவை உறுப்பினர்களுக்கு, நியமனம், பதவிகள் வழங்கல், இடமாற்றம் முதலானவைகளில் உதவலாகாதெனவும், அவ்வாறு இவர்களில் யாரேனும் பிரதமரையோ மற்றும் அமைச்சர்களையோ நாடுங்கால் அவர்கள் பற்றிய விபரங்களையும் வேண்டிய உதவிகள் பற்றியும் தமக்குத் தெரிவிக்கும் வண்ணமும், தாம் அவற்றினைப் பொது மக்களுக்குத் தெரிவித்து எதிரணியிலிருக்கும் பேரவை உறுப்பினர்களின் செய்கையினை அம்பலப்படுத்துவதாகவும் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றிப் பிரதமருக்கும் அமைச்சர்களுக்கும்தெரியப்படுத்தியுள்ளது. இச் செய்தியினை ஏரிக்கரைத் தினசரியான ''டெயிலி நியூஸ்'' வெளியிட்டுள்ளது.

வட, கீழ் பகுதிகளுக்கு வரும் அமைச்சர்களுக்கு எதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடாத்துவதெனத் தமிழர் கூட்டணியினர் தீர்மானித்ததுடன் எந்தவொரு சலுகைக்கும் அமைச்சர்களை நாடுவதில்லையெனவும் தொகுதிகளுக்கு வேண்டியவற்றினைத்தேசிய பேரவையிற் தெரிவிப்பதெனவும் தீர்மானங்கள் மேற் கொள்ளப்பட்டதை இந்தக் கோடரிக் காம்புகள் முதலிற் தெரிந்து கொள்ளட்டும்.

பதவிகள் நியமனங்கள் முதலானவைகளில் இந்த அரசு நூற்றுக்கு நூறு வீதம் தமிழ்மக்களுக்குப் பாதகமாகவே நடந்து கொள்ளுகிறது என்பதனை இந்தச் சுயவர்கள் அறிவார்களா? நியமனங்களில் தமிழ் இனத்தை இனஒதுக்கற் கொள்கை கையாளப்படுவதனை இந்தப் புல்லுருவிகள் உணர்வார்களா?

சுதந்திரக் கட்சிக் கிளைகள் ஏன் ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்அமைப்பாளர், தலைவர், செயலாளர் என ஒவ்வொரு பதவிக்குள்ளும் மறைந்திருந்து கொண்டு இடமாற்றம் பெற்றுத்தருகிறோம், நியமனம் பெற்றுத் தருகிறோம் எனப் பலவாறு கூறி அப்பாவி மக்களிடம் இந்தத் துரோகிகள் என்னென்னவற்றினையோ எல்லாம் சூறையாடுகிறார்கள் என்பதனையும் மக்கள் நன்குணர்வார்கள்.

தமிழர் கூட்டணியைச் சேர்ந்துள்ள தமிழ்த் தேசிய பேரவை உறுப்பினர்களின் ''தில்லுமுல்லுகளை'' அம்பலப்படுத்த முனைந்துள்ள இந்தச் சுயநலக்கிருமிகள் தங்களது கபட நாடகங்களையும், வஞ்சகச்செயல்களையும் அம்பலப்படுத்த எவரும் முன்வர மாட்டார்கள் என எண்ணித்தான் போலும், சு. கட்சித்தலைவர் தமது துணைவியாரை எங்கிருந்தோ அழைத்து வந்த யாழ். மாநகர சபையின் வைத்திய அலுவலராக நியமித்துள்ளார்.

சு. கட்சிக்கிளைகளை ஆரம்பித்துப் பொது மக்களைச் சுரண்டி ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டு தாமும் தமிழரெனப் பறைசாற்றுகின்றார்களே, உண்மையில் இவர்களும் தமிழர்களா என்றே சிந்திக்கத் தோன்றுகிறது. இவர்கள் ஏதோவொரு தோஷம் காரணமாகத் தமிழர்களாகப் பிறந்துவிட்டார்கள். எவ்வாறெனினும், இவர்கள் தமிழராய்ப் பிறந்ததனாலன்றோ, உண்மைத் தமிழ் மக்களுக்குப் பாதகமான புதிய அரசியலமைப்பினைத் தமிழர்களும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள் எனத் துணிந்துவாய் திறந்து அம்மையாரவர்கள் கூறக் கூடியதாக உள்ளது.

இந்த சு. கட்சித் தமிழர்கள், தமிழ் மக்கள் அவர்களுக்கு இதுகாறும் இருந்து வந்த ஒரு சில உரிமைகளும் பறிக்கப்பட்டு இரண்டாந் தரப் பிரசைகளாக, ஏன் அதனிலும் கீழானவொரு நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பினும், கவலை கொள்ளமாட்டார்கள். ஏனெனில் இந்தத் தமிழர்களின் எண்ணம் செயல் யாவும் உண்மைத் தமிழ் மகனொருவனின் எண்ணம் செயல் ஆகியவற்றிலிருந்து முற்றாக மாறுபட்டுள்ளனவேயாம். மேலும் தன்மானமுள்ள தமிழ் மகனெவனும் சு. கட்சியை ஆரம்பித்திருக்கவே மாட்டான். அவ்வாறு ஆரம்பித்திருப்பினும், புதிய அரசியலமைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னரும் தொடர்ந்து இந்தக் குழிபறிக்கும் கட்சியைப்பற்றிப் பிதற்றித் திரியவே மாட்டான்.

ஆனால் இந்தப் புல்லர்களுக்குத், தமிழ் மொழி, தமிழ் இனம்என்பவைகளைப்பற்றிக் கவலையே இல்லை. எனவேதான் தங்கள் திருவிளையாடல்களைத் தொடர்ந்து சிறப்பாகச் செய்திட வழி வகுக்கவே இவ்வாறானதொரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார்கள்,இந்தக் கொள்(ளை)கை வாதிகள். காற்றுள்ள போதே தூற்றத்துணிந்து விட்டார்கள் இந்த மகான்கள்.

தமிழர்கூட்டணியினருக்கு பதவியிலும் யாழ், மாநகர சபைத் தேர்தலிலும்தான் கண் எனின் இந்த வெளிவேஷதாரிகளுக்குக் கண் எவ்வெவற்றில் என்பதனை மக்கள் அறிவார்கள்

தமிழ் மக்களின் இழந்த உரிமைகளை எவ்வாறு மீண்டும் நிலைநாட்டலாம், தமிழ் மொழியினை எவ்வாறு சிறப்புறச் செய்திடலாம் என்றெல்லாம் சிந்திக்க இந்

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழில் தொடர்பு கொண்டால் உடனடியாய் இடமாற்றம்

## மொழித் திணைக்கள ஆட்சியாளரின் எதேச்சாதிகாரம்

தமிழ்த் தட்டெழுத்தாளர்களுக்கு சிங்களத் தகைமை தேவையில்லையென விலக்களித்து அவர்கள் தமிழிலேயே கடமையாற்றலாமென அரசாங்கம் அனுமதித்திருக்கையில் அதற்கு விரோதமான எதேச்சாதிகார நடவடிக்கைகளில் அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளர் திரு. பீட்டர் அபயசேகரா ஈடுபட்டுவருகிறார்.

அண்மையில் யாழ்ப்பாணக் கச்சேரி உள்ளூராட்சிப் பகுதியிலிருந்து அரசகரும மொழித் திணைக்களத்திற்கு மாற்றலாகி வந்த திரு. மயில்வாகனம் என்ற தமிழ்த் தட்டெழுத்தாளர் தமிழிலேயே 'திணைக்களத்துடன் தொடர் பாற்றியதனால் உடனடியாக இடமாற்ற உத்தரவுபெற்றுள்ளார்.

இவரது குழந்தை யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதனால் திடீரென யாழ்ப்பாணம் சென்ற போது புகையிரத ஆணைச் சீட்டிற்கு விண்ணப்பித்திருந்தார்.

தமிழிலேயே எழுதப்பட்ட புகைவண்டி ஆணைச்சீட்டு விண்ணப்பப் பத்திரத்தை மூலையிலே போட்டு விட்டு மௌனம் சாதித்திருக்கிறார்கள் அரசகருமமொழித் திணைக்களத்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்.

தமிழில் கருமம் ஆற்றும் இவர்மீது வஞ்சம் தீர்த்தற்காகவே திடீர் இடமாற்றம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தமிழ்த் தட்டெழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. பரமகுரு அவர்களும் இதே திணைக்களத்தில் கடமையாற்றியபோது தமிழிலே கருமம் ஆற்றியதனால் திறைசேரிக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

---

## ஆங்கிலத்தில் தந்தியா?

### விளக்கம் கோருகிறார் சிங்கள ஆணையாளர்

அரசகரும மொழித் திணைக்களத்தைச்சேர்ந்த தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஒருவர் மகப்பேற்றுக்காக மனைவியை ஆஸ்பத்திரியில் அனுமதித்தற்கு தனது ஊராகிய வதிரிக்குச் சென்றிருந்தார். தன விடுதலையை நீடிக்குமாறு இரு தந்திகளை அங்கிருந்து ஆணையாளருக்கு அடித்திருந்தார்.

அலுவலகம் திரும்பியுள்ள மொழிபெயர்ப்பாளரிடம் ஆங்கிலத்தில் தந்தி அடித்தற்கு ஆணையாளரால் விளக்கம் கோரப்பட்டுள்ளதாம்.

இதற்கிடையில் வதிரி அஞ்சல் நிலைய அதிபரின் சிங்களத் தகைமை பற்றி மொழித் திணைக்கள ஆணையாளர் விசாரணை நடத்துவதாகத் தெரியவருகிறது. தமிழ் அமைச்சர் குமாரசூரியருக்குரிய தபால் அமைச்சு விடயத்தில் ஆணையாளர் கடுமையாய் இருந்து வருவதும், தபால் அமைச்சரின் அலுவலகத்திலிருந்து தமிழ் மொழிபெயர்ப்புக்காக அனுப்பப்பட்ட பொது மக்களுக்கு இன்றியமையாத பலநூறு படிவங்களை முகத்தில் கரிபூசினாற்போல தபால் அமைச்சிற்கே திருப்பி அனுப்பியதும் ஏற்கவெவ அறிந்த செய்தியாகும்.

---

## 3-வது வருடாந்தப் பொதுக்கூட்டம்

பண்டத்தரிப்புதிருக்குறள் சன சமூக நிலையத்தின் மூன்றுவது வருடாந்த நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் கடந்த 16.2.73 வெள்ளிக்கிழமை விமரிசையாக நடைபெற்றது. அத்தருணம் தெரிவு செய்யப்பட்ட புது வருட நிர்வாகிகள் விபரம்:—

தலைவர்:— திரு. எஸ். மாணிக்கம். உபதலைவர்:— ந. தேவராசா. காரியதரிசி:— நா. மா. கந்தசாமி. உபகாரியதரிசி:— செ. சண்முகநாதன். தனதிகாரி:— இ. திருநாவுக்கரசு உபதனதிகாரி:— பி. பத்திநாதர். நிர்வாக சபை உறுப்பினர்:— வ. விசுவலிங்கம், பொ. யோகராசா, க. சுப்பிரமணியம்.

---




அரசியலில் வஞ்சகமும், பொறாமையும் பிடித்து தமிழினத்துக்கு விரோதமாக செயல்பட்டுவரும் தினபதியின் 'அரசகேசரியார்' (இந்த அரசகேசரியார் திருவாளர் எஸ். டி. சிவநாயகம் என்பது பகிரங்க உண்மை) இலக்கிய உலகிலும் புகுந்து திருட்டு வேலையும் திரிப்பு வேலையும் செய்ய அண்மையில் முனைந்துள்ளார்.

அதுவும் திருவள்ளுவர் தந்த திருக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர் மீதே தனது கையை இவர் வைத்திருக்கிறார். குறளுக்கு எழுதப்பட்ட உரைகளில் பரிமேலழகர் உரையே சிறந்தது என்பது அறிஞர்கள் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் உண்மையாகும்.

அப்படிப்பட்ட பரிமேலழகர் உரை மீதே தவறு கண்டுபிடித்து பரிமேலழகரை விடத்தாமே அறிவாளி எனக் காட்டிக்கொள்ள முனைந்திருக்கிறார் அரசகேசரி.

பரிமேலழகர் உரைமீது தகுந்த ஆதாரத்துடன் யாராவது தவறைச் சுட்டிக் காட்டினால் அதை அறிஞர்கள் ஒப்புக்கொள்ளவே செய்வர். ஆனால் அரசகேசரியாரோ, பரிமேலகழகர் உரையை மறைத்துவிட்டோ, அல்லது விளங்கிக்கொள்ளாமலோ — பரிமேலழகர் மீது பழியைச் சுமத்தி விட்டு, பரிமேலழகரின் உண்மையான உரையைத் தனது புதிய கண்டுபிடிப்புப்போல எழுதியிருக்கிறார். அரசியலில் திரிப்பு வேலைசெய்பவர் பரிமேலழகர் உரையிலும் திரிப்பு வேலை செய்ய முயன்றிருக்கிறார்.

இனி விஷயத்துக்கு வருகிறேன். சில திங்களுக்கு முன்

குணமென்னும் குன்றேறி
நின்றார் வெகுளி
கணமேனும் காத்தல்
அரிது.

என்ற குறளுக்கு விளக்கமளித்து அரசகேசரியின் பெயரில் சிந்தாமணியில் ஒரு கட்டுரை இடம் பெற்றிருந்தது.

அதில், பரிமேலழகர் உட்பட திருக்குறளுக்கு உரையெழுதியவர் அனைவரும் இந்தக் குறளுக்கு, 'சிறந்த நற்பண்புகளாகிய மலையின் [illegible] ஏறி நின்ற பெரியோர் கொள்ளும் சினம் மிகவும் உக்கிரமானதாயிருக்குமாதலால் அதைக் கணப்பொழுதேனும் எவராலும் தாங்கிக் கொள்வது அரியதாகும்' என்றும் வெகுளியின் காரணமாக அவர்கள் விதிக்கும் தண்டனையை அல்லது சாபத்தை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டிவரும் 'என்றும் உரையெழுதியிருப்பதாகவும், இந்த உரை தவறானதென்றும் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அக்குறளுக்கு 'புதிய' உரையென்று பின்வரும் பொருள்தரப்பட்டிருந்தது.'

'நற்குணங்களையுடைய பெரியவர்களுக்கும் சில சமயம் திடீர் என்று ஏதாவது ஒரு விஷயத்தில் சினம் ஏற்படக்கூடும். ஆனால் அந்தக் கோபத்தை அவர்கள் உடனே—அந்தச் சணமே—தணித்து விடுவார்கள். ஏற்பட்ட வெகுளியை முழுமையாக—ஒரு கணப்பொழுது கூட அவர்களால் பாராட்டிக்கொண்டிருக்கமுடியாது. அது அரிதான காரியம் அவர்களுக்கு.'

இவ்வாறு 'புதிய' உரை தரப்பட்டிருக்கிறது. இது ஒன்றும் அரசகேசரியின் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பல்ல—இது தான் பரிமேலழகரின் உரையின் உண்மையான பொருள். பரிமேலழகர் உரை மீது மாசு கற்பித்துவிட்டு — பரிமேலழகரின் உண்மையான உரையைத் தமது உரைபோல எழுதி, திருட்டுவேலை, நடத்தியிருக்கிறார் அரசகேசரி.

பரிமேலகழர்இக்குறளுக்கு கூறியிருக்கும் பொருள் என்ன?

'அநாதியாய் வருகின்ற வாறு பற்றி, ஒரோவழி வெகுளி தோன்றிய பொழுதே—அதனை மெய்யுணர்வு [illegible] மொழிமாந்தராகலின் 'காத்தல் அரிது' என்றும் கூறினர்.'

—இதுவே பரிமேலழகரின் உரை. உண்மையான இதையே திருடி தனது உரை போல எழுதியிருக்கிறார் 'அரசகேசரி' சிவநாயகம்.

இந்த 'திருட்டை' ஒரு போதும் இலக்கிய உலகு மன்னிக்காது. இலக்கிய உலகத் திருடர்களை வேதாளம் விட்டு வைக்காது.

ஃ ஃ

தமிழ் ஈழத்தின் மிகச் சிறந்த கவிஞர்களில் ஒருவரான திரு. வி. கந்தவனம் அவர்களின் ''கவியரங்கில் கந்தவனம்'' எனும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் குரும்பசிட்டியில் நடைபெற்றது.

கவியரங்குகளில் கவிஞர் கந்தவனம் கவிசொல்லும் முறையும் அழகும் தனி கவர்ச்சியுடையது. கவியரங்கு என்றதுமே காத்தூரம் ஓடுபவர்கள் கூட, கந்தவனம் கவிபாடுகிறார் என்றால் ஆவலுடன் இருந்து கேட்பதை நான் கண்டிருக்கிறேன். நகைச்சுவையுடன், கூடியிருந்தோர் சிரிக்க சிரிக்க கவிசொல்லி, சமுதாய ஊழல்களை சாடுவதில் கவிஞர் கந்தவனத்துக்கு நிகர் கவிஞர் கந்தவனம் தான்.

அவரது நூல் வெளியீட்டு விழாவில இரசிகமணி கனக — செந்திநாதன் பின்வருமாறு பேசினார்:-

''கந்தவனத்தைப்போல் அழகாகத் தமிழை உச்சரித்து அரங்குகளிலே கவர்ச்சியாக கவிதைசெய்வோரை நான் காணவில்லை. அது மட்டுமல்லாது, அடுத்தடுத்து மாறும் சந்தர்கள், நகைச்சுவை போன்ற பல உத்தி முறைகளாலும் அவர் பொதுமக்களைக் கவர்ந்து விடுகிறார். இன்று அரசியல்வாதிகளுக்கென்று கூட்டம் இருப்பதுபோல கவிஞர் கந்தவனத்துக்கென்றும், தனியான இரசிகர் கூட்டம் இருந்துவருகிறது. இதை நான் சும்மா சொல்லவில்லை. ஊர்கள் தோறும் நேரிலே கண்ட அனுபவத்தைக் கொண்டு சொல்கிறேன்—''

ஆம், கந்தவனம் ஒரு 'மக்கள் கவிஞன்'தான்! ஐயமே இல்லை!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்திற்குப் போராடி வெற்றி கண்ட சிறுபான்மை இனங்களின் வீரமிகு வரலாறு!

## ஈழத் தமிழ் தேசிய இனத்துக்கு எழுச்சியூட்டக்கூடிய நிகழ்ச்சிகள்

## அடக்குமுறை ஒருபோதுமே வென்றதில்லை!

ஓர் நாட்டின் அன்றுடப் பிரச்சினைகளும் — அந்நாட்டின் நிர்வாக முறைகளுமே இன்று அரசியலாக வளர்ந்திருக்கின்றது. ஒரு நாட்டின் நிகழ்கால அரசியலை வைத்து எதிர்கால அரசியலை எடையிடவேண்டுமானல் அந்நாட்டின் இறந்த கால அரசியல் வரலாற்றின் தத்துவங்களை நாம் புரட்டிப்பார்க்கவேண்டும். ஒருநாடு அன்று எப்படி இருந்தது? எப்படியெல்லாம் பல நாடுகள் போற்றிப்புகழ் கொடிகட்டி வெற்றி நடைபோட்டது? பின் எப்படி மாண்டொழிந்து மண்மேடாகியது? அதனல் மக்களும்—பிற நாடுகளும் கற்றுத் தேற வேண்டிய படிப்பினைகள் என்ன என்பதை அரசியலில் சாதாரண அறிவு படைத்தவர்களால் கூட புரிந்து கொள்ள முடியும்.

மாவீரன் நெப்போலியனல் வீர தீரத்துடன் கட்டி எழுப்பப்பட்ட வல்லரசான "பிரான்ஸ்" இன் வீழ்ச்சிக்கு அந்நாட்டுச் சிறுபான்மை தேசிய இனமான "கியூஜிகொச்" மக்களுக்கு உரிமை மறுத்ததே காரணமாக அமைந்தது.

"தளபதிதாரிக்"கின் தனித்துணிவால் புகழ்மிக்க சரித்திரம் கண்ட "ஸ்பெயின்" தன் புகழிழந்து—பொலிவிழந்து — நிலையிழக்க அந்நாட்டுச் சிறுபான்மைத் தேசிய இனமான அராபிய மக்களின் தன்னின உணர்வு விடாப்பிடியாக மறுக்கப்பட்டதே அடித்தளமாக அமைந்தது.

புகழ் படைத்த சிகரத்தின் எல்லை கண்ட பாரசீகத்தின் பழம் பெருமைகளெல்லாம் மண்மேடாகிச் செல்வமிழந்து—சரித்திரமிழந்து நிரந்தர அடிமை என்ற நிலையில் வாழ ஆட்சியாளர்கள் கண்மூடித்தனமாகக் கடைப்பிடித்த சுதந்திர உணர்வில்லாக்கொள்கையே அச்சாணியாக அமைந்தது.

அதேபோன்றுதான் எமது இலங்கையும் நாளுக்கு நாள் வேகமாக வீழ்ச்சியடைந்து வரும பொருளாதார சரிவுகளுக்கும்—விலைவாசி ஏற்றங்களுக்கும்—வேலையில்லாப் போராட்டங்களுக்கும்—அரசியல் ஷீணநிலைக்கும் மூல காரணமாக அமைந்திருக்கும் ஒரே பிரச்சினை—மேலே நாம் பார்த்த நாடுகளைப போன்று அரசியலில் மிருகத்தனமாகக்கடைப் பிடிக்கும ஆட்சியாளர்களின் கொள்கைகளே காரணமாகும்.

பிரான்ஸ், ஸ்பெயின், பாரசீகம் போன்ற பல நாடுகளின் புகழ்களெல்லாம் அழிந்தொழிந்த அடிப்படைக் காரணங்களைப்பற்றி, இறந்த கால கீர்த்திமிக்க வரலாறுகளைப்படித்தறிந்த நாம இலங்கையின் இன்றைய ஷீணநிலைக்கும் அடிப்படையாது என்பதைப் புரிந்து கொண்டோமல்லவா? எது எப்படியிருந்தாலும் — அதற்காக தமிழ் பேசும் மக்கள் ஒரு வழி ஆட்சிக்குக் கைதட்டவே முடியாது.

### விடுதலைத் தியாகங்கள்

மொழி — நாகரீகம் — கலை கலாசாரம் முதலான பல வற்றிலும் வேறுபாடு கொண்ட ஓர் இனத்தாரை மற்றேர் இனத்தார் ஆள்கின்றுர்கள் என்ருல், அடக்கி ஆதிக்கம் செலுத்துகின்றுர்கள் என்றுதான் பொருளாகின்றது. ஓர் இனத்தாரை மற்றேர் இனத்தார் பெரும்பான்மை என்ற புள்ளிவிபரத்தைக்காட்டி அடக்கிஆள நினைத்த அரசை மக்கள் இரக்கப்பட்டும்கூட விட்டுவைத்ததாக வரலாறு கிடையாது. விடுதலையின் வரவுக்காக அடக்கப்பட்ட தேசியஇனங்கள் அளித்த உயர்த்தியாகங்கள் விடுதலை வரலாற்றிலே பெருமைக்குரியவைகள்—புகழுக்குரியவைகள்.

அல்ஜீரியா தன் விடுதலைக்காக பத்து லட்சம் மக்களைக் காணிக்கையாக்கியிருக்கின்றது—பங்களாதேஷ் அதன் உயரிய உரிமைக்காக அல்ஜீரியாவின் தியாகத்திற்குச் சமமாகச் சளைக்காமல் பலியிட்டிருக்கின்றது. அயர்லாந்து தன் உரிமைக்காக

**கே. எஸ். ஏ. கபூர்**

ஆறுலட்சத்திற்கதிகமான மக்களைப் பலியிட்டுத் தொடர்ந்து 300 ஆண்டுகளுக்குமேலாகப்போராடி வெற்றி கண்டிருக்கின்றது.

அதேபோன்று 3200 ஆண்டுகளுக்கு மேலாக உலகில் சிதறிக்கிடந்த 'யூத' இனம் தனிநாடு காண பல லட்சம் மக்களைப்பலியிட்டு வெற்றிகண்டிருக்கின்றது. இப்படித் தத்தமது உரிமைகளுக்காக எந்த இனமும்—எப்போதுமே—எதையிழக்கவுமே தயங்கியதில்லை. அதனல்தான் இந்த இருபதாம் நூற்றுண்டு சுதந்திர சகாப்தம் என்று பெருமைக்குரிய நூற்றுண்டாகத் திகழ்கின்றது.

### விடுதலை கண்ட இருண்ட கண்டம்

இந்நூற்றுண்டுக்கு இப்பெருமையைத் தேடித் தந்த கண்டம் ஆபிரிக்காக் கண்டம் ஒன்றுதான். இருண்ட கண்ட மென்ருல் ஆபிரிக்காக்கண்டம் என்றுதான் பொருள். உலகம் தன் குறிப்பேட்டில் தேடிக்கொண்ட ஐந்து கண்டங்களில் ஆபிரிக்காக் கண்டம் ஒன்றுதான் இதர கண்டங்களின் சுரண்டல் காடாக, அடிமை வாழ்வுக்கே பிறந்த மக்களை எப்படியோ அது கடந்த காலங்களில் பெற்றிருந்தது. ஆதிக்க வாதிகளின் அதிகாரத்திற்கும் — ஆணவத்திற்குமாக அடிபணிந்து பாதம் தொழுது நின்ற ஆபிரிக்காக்கண்டம் இன்று இன எழுச்சியையும்— அப்பெரும் எழுச்சியால் உதித்த செங்கதிரோனையும் கண்டு உள்ளம் பூரித்து நிற்கின்றது.

அடிமைகொண்ட ஆதிக்கபுரியினர் தங்கள் ஏதேச் சதிகாரத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு [illegible] முடிச்சுக்களுடன் [illegible] தினம் வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். இருண்ட கண்டத்தில் இருண்ட குடிசையில் முடங்கிக்கிடந்த ஆபிரிக்கச் சிங்கங்கள் இன்று விழித்தெழுந்து பிடரியை உலுக்கிக் காலைத்தட்டி இன முழக்கமிட்டுள்ளன. அதன் எதிரோலியில் தினம் தினம் விடுதலை முத்திரையைக் குத்திக்கொண்டிருக்கின்றன. அதன் வேகம் என்றும் எங்கும் கனலாய்தெறித்து விழுகின்றது.

போராட்டக்கனல்—புரட்சிக்கனல் — விடுதலைக்கனலாக அது காட்டுத் தீ எனப் பரவுகின்றது. அதனல் அங்கே தம் சுதந்திரத் தாகத்தைத் தீர்த்துக்கொள்கின்றனர் இருண்ட கண்டத்து மக்கள்.

கடந்த கால அரசியல் நிகழ்ச்சிகளையும் — சரித்திர சான்றுகளையும் நாம் புரட்டிப்பார்க்கின்றபோது ஆணவத்தின் விழிம்பிலே நின்று காட்டாட்சி நடத்திய ஏதேச்சதிகாரிகள் வெயில் பட்ட பனிபோல் இன எழுச்சியால் வீறுட்டெழுந்த மக்கள் சக்திக்கு முன்னே விரைந்தோடிய கதைகள் ஒன்றல்ல — இரண்டல்ல ஏராளம்! ஏராளம்!! புவி ஆண்டவர்கள் புதர் நோக்கி ஓடுகின்ற காட்சிகளைக் காண முடியும். ஆழப்பிறந்தவர்கள் நாங்கள் — அடிமையாகவே சாகப்பிறந்தவர்கள் நீங்கள் என்ற மமதை மங்கி மடிந்து மண்மேடாகிய வரலாறுகள் தெரியும். கால வெள்ளத்தின் வேகப்பாய்ச்சலில் பொலபொலவென்றுதிர்ந்த ஏதேச்சாதிகாரிகளின் மண்கோட்டைகளில் பல புரியும். அத்தனை நிகழ்ச்சிகளும் தோன்றி மறையும் கதிரவன்போல் தோன்றி மறைந்திருக்கின்றன ஆபிரிக்காக் கண்டத்தில்! இருண்ட கண்டத்தில் தங்கள் இரும்புப்பிடியை இறுக்கிக்கொண்டோம் என்ற இறுமாப்பில எக்காளமிட்ட ஏகாபத்திய வாதிகளின் நிலை, அங்கே உறங்கிக்கிடந்தோர் மத்தியில் பரிதாபத திற்குரியதாகிக்கொண்டிருக்கின்றது.

### வல்லரசுகளின் மதியூகம்

மிக மிகச் சிறுபான்மையினர்களாகக் குடியேறிய வெள்ளையர்கள் அற்ப சொற்ப ஆசைகளையும்—நலன்களையும் பாதுகாப்பதற்காக இன ஒதுக்கல் கொள்கைகள் பலவற்றைவிடாப்பிடியாக சட்டமாக்கினர். அப்போது ஆபிரிக்கமக்களின் வாழ்வு மிக நீண்ட இருண்ட காலமாகவே இருந்தது. ஆனல் எவ்வளவுதான் மிக நீண்ட இருண்ட காலமாக இருந்தாலும் ஓர் இனத்தினதோ — நாட்டினதோ விழிப்புற்ற உணர்ச்சியை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது—வெட்ட வெட்டத் தளைக்கும் வாழை போன்றது அது.

பிரிட்டிஸ், பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்பெயின், போர்த்துக்கல் போன்ற மண்ணாசை கொண்ட வல்லரசுகளின் [illegible] பாய்ச்சலையும் — அடங்கிக் கிடந்த மக்களின் இன எழுச்சியையும் அரசியல் மதியூகத்துடன் உணர்ந்து நடந்து கொண்டதற்கு ஆபிரிக்க மக்களின் உரிமை உணர்வும் தியாக சிந்தையுமே காரணமாக அமைந்திருக்கின்றன. பல லட்சக்கணக்கான உயிர்களையும் — உடமைகளையும் சுதந்திரத்தின் மகத்துவத்திற்காகப் பலி கொடுத்துத் தம் எதிர்கால சந்ததிகளின் சரித்திரத்தையே பிற இனங்கள் மதிக்கும் வகையில் தலைகீழாக மாற்றி விட்டிருக்கின்ருர்கள்.

ஏறத்தாழ இருபத்திமூன்றுகோடி ஆபிரிக்க மக்களில் இதுவரை சுமார் இருபதுகோடி மக்கள் வரை அடக்குமுறைகளைத்தகர்த்தெறிந்து விடுதலை பெற்ற நாட்டினர்களாக உலகில் தலை நிமிர்ந்து வாழ்கின்ருர்கள். அதே போன்று எஞ்சிய மக்களும் — நாடுகளும் விடுதலை விழாக்கொண்டாடும் நாள் அதிக தூரத்திலில்லை என்பதையும் ஆங்காங்கு குமுறிவெடிக்கும் மக்கள் உள்ளங்கள் வெள்ளிடைமலையாக எடுத்துக் காட்டுகின்றன. மருண்ட உள்ளத்தினர் தெளிவு கொண்டு திரண்டெழுந்ததினல் இருண்டகண்டம் ஒளியேற்றிக்கொண்டது.

### விடுதலை பெற்ற சின்னஞ்சிறு இனங்கள்

எனவே—இந்நாடுகள் சிலவற்றில் வாழும் மக்களின் எண்ணிக்கை — அவர்களின் கடந்த கால வரலாறு— அவர்கள் துணிந்து நடத்திய போராட்டங்களை எல்லாம் எண்ணிப்பார்க்கும் நாம்— மறுபுறத்தில் சரித்திரம்— நாகரீகம் தனிமொழி—வீரம் கண்ட தமிழன் ஆமையாக, ஊமையாக, வீரமிழந்த கோழையாக இங்கு கை கட்டி வாழ்வதையும்—அவர்கள் எம்மைக் கேலியால் கொல்வதையும் பார்க்கின்ருேம். 10 லட்சம் காபன் மக்கள், 14 லட்சம் காங்கோ குடியாட்சி மக்கள், 13 லட்சம் மொரிட்டானிய மக்கள் 17 லட்சம் லிபிய மக்கள், 20 லட்சம் லைபீரிய மக்கள் போன்ற சின்னஞ் சிறிய நாடுகளும்—மக்கள் தொகையினர்களும் உரிமைப் போராட்டங்கள் பல நடத்தி வெற்றிக்கொடிநாட்டியிருக்கும்போது இலங்கை வாழ் 35 லட்சம் தமிழ் பேசும் மக்கள் தம் உரிமைக்காக ஓர் போராட்டம் நடத்தப் போவதை எந்த சக்தியால் தடுக்க முடியும்? அல்லது தமிழினத்தவர் என்ன உரிமை உணர்வுக்கு விதி விலக்கானவர்களா?

( 7-ம் பக்கம் பார்க்க)

## கந்தை அணிந்த வீரர்கள்

— சாலை இளந்திரையன் —

அடிதேடிச் சீர்தேடி அமுதான இசைதேடிப்
பாடி—என்
அகத்தூறும் பாட்டுக்கு மிகவான எழில்செய்ய
அறிவேன்:
முடிசூடும் அவர்பாலும் பிறப்பாலும் அப்பாடல்
உலவ—என்
முழுப்பாடல் தனைவண்ணப் பொலிவாக
உருவாக்க அறிவேன்:

ஆனலென் எண்ணங்கள் சோம்பேறிச் சோதாக்கள்
ஆமோ?—பொழுது
ஆமந்தச் செல்வத்தை வீணுக்கும் ஆர்ப்பாட்டர்
ஆமோ?
தேனன மொழியோடும் சுருளான முடியோடும்
ஓடி—பிறர்
சிரிப்பேறத் திரிகின்ற இளமங்கை ஆமோஎன்
பாடல்?

போரேறும் வீரர்க்கும் வீறேற்றும் என்பாடல்
ஒலியே—அந்தப்
புதுவீரக் கலிகொண்டே பொருகின்றேன்
மாற்ருரைத் தனியே!
சீரேறும் என்பாடல் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றும்
இங்கே—என்
செம்மாந்த தோளோடு தோள்நிற்க வேவந்த
வீரன்!

அழகான உடையில்லை, ஆனலும் என்பாடல்
வீரன்—பகை
அதிர்ந்தோட நடைகொள்ளும் அதனலே
என்பாடல் வீரன்!
எழிலான உடைகொண்டே எவனேனும் வீறெறல்
உண்டோ?—தனது
இருதோளின் ஏற்றத்தி னலன்றே ஒருவீரன் வீரன்!

'எனதாவி முடிவான பின்வாழு மோ,பாடல்?'
என்றே—நான்
எதுநாளும் ஒருகேள்வி தனைக்கேட்டு விடைதேடல்
இல்லை:
தனதாவி, உறுபோரில் தான்தோற்கும் என்பாடல்
என்ருல்—அது
சரியாகும், தகவாகும்; அதுதானே பாட்டுக்கு
வாழ்க்கை?

வீழ்ந்தாலும் என்பாடல் தனைக்கொண்ட ஏடுபொன்
ஏடே—என்
வீருன எண்ணங்கள் மினிர்கின்ற ஏடுபொன் ஏடே:
வாழ்ந்தேறி இம்மண்ணில் உரிமைக்கே உயிர்தந்த
வீரர்—பலர்
வாழ்கின்ற கல்லறை அன்ருேஎன் வளமான
பாடல்!

—(அங்கேரியக் கவிஞன் சாந்தோர் பெட்டோபியின் கவிதை ஒன்றைத் தழுவியது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

சனநாயகத்தை குழி தோண்டிப் புதைத்துவிட்டு, மக்களின் ஏகோபித்த எதிர்ப்புக்கு கிஞ்சிற்றும் செவி சாய்க்காது, பத்திரிகை சுதந்திரத்தையும், மக்களின் கருத்து சுதந்திரத்தையும் பறித்திடும் பத்திரிகைச் சபை மசோதாவை எதிர்க்கட்சியினர் இல்லாமலேயே ஏதேச்சாதிகாரமான முறையில் அரசு சட்டமாக்கியுள்ளதை வன்மையாக கண்டிக்கும் நோக்குடன் இவ்வார "எண்ணத்தை" எழுதாமலேயே விட்டுள்ளோம்

— ஆசிரியர்.

# 'தபால் சட்டத்திருத்தத்தில் தமிழுரிமைக்கு எங்கே இடம்?

## பூதக்கண்ணாடியில் பார்த்தாவது அமைச்சர் குமாரசூரியர் காட்டுவாரா?'

## தேசிய பேரவையில் உடுவில் தர்மர் பேச்சு!

**"நாம்** கொண்டு வந்த தபால் சட்டத்திருத்தத்தின் மூலம் தமிழுக்கு உரிமை அளிக்கப்படுவதாகவும், அதைத் தமிழரசுக்கட்சியினர் எதிர்ப்பதாகவும், இச் சபையில் தபாலமைச்சர் (செல்லையா குமாரசூரியர்) கூறினார். அமைச்சரின் சட்டத் திருத்தமும் ஒரு பூதக்கண்ணாடியும் இதோ என்னிடம் இருக்கிறது. பூதக்கண்ணாடியில் பார்த்தாவது, இத்திருத்தத்தில் தமிழுரிமை பற்றி எங்காவது கூறப்பட்டுள்ளதா என்று காட்டும் படி நான் கேட்கவிரும்புகிறேன்."

—இவ்வாறு தேசிய பேரவையில் தபால் சட்டத் திருத்த மசோதா மீது பேசிய உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

தபால் சட்டத்தின் 8(D) பகுதிக்கு தபாலமைச்சர் கொண்டு வந்திருந்த திருத்தம் இதுதான். "Ministers may by rule provide for the franking of postal articles by officials of state service and members of the national state assembly under such limitations as may from time to time be deemed expediant."

கறுப்பு எழுத்தில் தரப்பட்டிருக்கும் and members of the national state assembly (தேசியபேரவை உறுப்பினர்களும்) என்பதே அமைச்சரின் திருத்தம். மீதி ஏற்கெனவே இருந்து வந்த சட்டமாகும்.

இதன் தமிழாக்கம் வருமாறு:-

"அரசு ஊழியர்களும் தேசிய பேரவை உறுப்பினர்களும் தபால்களில் 'பிராங்கை' பாவிப்பது சம்பந்தமாக காலத்துக்குக் காலம் இருக்கும் கட்டுப்பாடுகளுக்கு அமைவாக அமைச்சர்கள் சட்டவிலை மூலம் வசதி செய்து தருவார்கள்."

இந்தச் சட்டதிருத்தம் வந்தபோதுதான் தமிழரசு உறுப்பினர்கள் அதை எதிர்த்தார்கள். இச்சட்டத்திருத்தத்தினால் தமிழில் 'பிராங்க்' குத்துவதற்கு வசதிசெய்யப்பட விருப்பதாகவும், அதைக்கூட தமிழரசுக்கட்சியினர் எதிர்ப்பதாகவும் தபாலமைச்சர் தேசிய பேரவையில் குற்றம் சாட்டியிருந்தார். நாளேடுகள் சிலவும் குமாரசூரியர் ஏதோ தமிழருக்கு நன்மை செய்வது போலவும் தமிழரசார் அதற்கு முட்டுக்கட்டை போடுவது போலவும் எழுத்துக்களில் பிரசாரம் செய்தன.



இந்த திருத்தத்துக்கு இன்னேர் திருத்தத்தை பண்டிதா இரத்தினம் கொண்டு வந்திருந்தார். பண்டிதரின் இத்திருத்தம் அரசாங்க அலுவலகங்கள் யாவற்றுக்கும் தமிழிலும் அச்சுப் பொறிக்கும் உரிமை வழங்கப் படவேண்டும் என்று கோரியது.

பண்டிதரின் திருத்தம், எழுத்தில் கொடுக்கப்படவில்லை யென்ற காரணத்தினால் சபாநாயகரால் விவாதத்துக்கு ஏற்கப்படவில்லை. எனினும், குறித்த திருத்தத்தை ஏற்கிறீர்களா என்று சபாநாயகர், குமாரசூரியரிடம் கேட்டபோது 'இல்லை' என்று பதிலளித்தார் அமைச்சர்.

திரு. வி. தர்மலிங்கம் மேலும் பேசும்போது கூறியதாவது:-

இந்த திருத்தம், தமிழுக்கு உரிமை வழங்குகின்றது என்றும், அதை நாங்கள் (தமிழரசார்) எதிர்ப்பதாகவும் இச்சபையில் குமாரசூரியர் கூறினார். இத்திருத்தத்தில் தமிழுரிமை பற்றி ஏதாவது கூறப்பட்டிருக்கிறதா என்று நான் துருவித்துருவிப்பார்த்தேன்—

என்னால் எதையும் கண்டு கொள்ள முடியவில்லை. இதோ பூதக் கண்ணாடியையும் கொண்டுவந்திருக்கிறேன். பூதக் கண்ணாடி மூலம் அமைச்சராவது தமது திருத்தத்தை பார்த்து தமிழுக்கு எங்கே இடம் என்று சுட்டிக்காட்டட்டும்!

அமைச்சர் குமாரசூரியருக்கு ஒருவித நூதனமான கண் (QUEER EYES) இருக்கிறது போலும்! அதனால் தான் அவருக்கு கண்ணுக்கு தெரியவேண்டியவை தெரியாமல் போகின்றன. தெரியாததெல்லாம் தெரிகின்றன.

வேலணையில் 400 பேர் நின்று இரண்டு கார் வெளிச்சத்தில் கறுப்புக்கொடி காட்டினார்கள். அது அவருக்கு தெரியாமற் போய் விட்டது. அதே வேளையில் அவர் கொண்டுவந்திருக்கும் இத்திருத்தத்தில் தமிழைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. ஆனால் அவரோ தமிழுரிமைக்கு இடம் இருப்பதாக கூறினார்.

குமாரசூரியர் அமைச்சர் பதவி ஏற்கும்வரை இலங்கையின் சகல அஞ்சல் நிலையங்களிலும் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் தமிழில் அச்சு முத்திரையைப் பயன்படுத்தி தபால்களை அனுப்பும் உரிமையை அனுபவித்து வந்தோம். 1970 மே மாதம் குமாரசூரியர் பதவிக்குவந்த பின்னர் இந்த உரிமை பறிக்கப்பட்டது. நடைமுறையில் அனுபவித்துவந்த உரிமையைப் பறித்தவர் இன்றைய தபாலமைச்சர்தான்.

இந்தச் சட்டத்திருத்தம் தேசிய பேரவை உறுப்பினர்களின் உரிமையை கட்டுப்படுத்துவதாக இருக்கிறதே தவிர தமிழுக்கு உரிமை கொடுப்பதாக இல்லை. தமிழுரிமைபற்றி கிஞ்சித்தும் அதில் கூறப்படவில்லை." இவ்வாறு திரு. தர்மலிங்கம் பேசினார்.

திரு. தர்மலிங்கத்துக்கு சட்டம் பற்றி எதுவும் தெரியாதென்றும் சட்டக் கல்லூரி சென்றும் படிப்பை அவர் பூர்த்திசெய்யவில்லையென்றும குமாரசூரியர் ஒரு கட்டத்தில் கூறியபோது, "நானாவது படிப்பைப் பூர்த்திசெய்யாவிட்டாலும் சட்டம் படித்திருக்கிறேன். உமக்கு அந்த அளவு சட்ட அறிவும் இல்லையே" என்று இடைமறித்து சுடச் சுடக் கொடுத்தார் உடுவில் பா. உ.

## சிவபூசையில் "கரடி"!

### இந்து சமயம் கேலிக்கூத்தாவதா?

சிவபூசையின் போது 'கரடி' புகுகிறது! அதுவும் கம்யூனிஸ்ட் கரடி நுழைகிறது!

ஆம், அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் நடைபெறும் மகாசிவராத்திரி விழாவில் கம்யூனிஸ்ட் அமைச்சர் பீட்டர் கெனமன் கலந்துகொள்ளுகிறாராம்!

விழா வி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறுகிறதாம்!

இந்துக்களே சிந்தியுங்கள்! சைவசமயம் இவ்வளவு தூரம் கேலிக கூத்தாக்கப்படுவதா?

சிவராத்திரி இந்துக்களின் மிகப் புனிதமான தினம்—அத்தினம் இப்படி கேலிக் கூத்தாக்கப்பட்டு அசிங்கப்படுத்தப்படலாமா?

மதத்தை அபின் என்று கூறுகின்ற— மத நம்பிக்கை கடவுள் நம்பிக்கையற்ற கம்யூனிஸ்டுகளுக்கு மகாசிவராத்திரி விழாவில் என்ன வேலை?

குறுகிய அரசியல் நோக்கத்துடன் இந்து சமயத்தின் புனிதத்தை மத நம்பிக்கையற்ற கம்யூனிஸ்டுகள் நாசமாக்குவதை இந்துக்கள் அனுமதிக்கப் போகிறார்களா?

## காசி ஆனந்தன்

## வண்ணை ஆனந்தன்

சிறையில் இன்று

## 275-வது நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரண்ட பிரதேசங்களுக்கு கந்தது சிறுதோட்டச் செய்கையே!

## காடுவெட்டி களனியாக்கி 'நாடு' காண தமிழ் இளைஞர் சமுதாயம் முன் வரவேண்டும்!

முன் இரண்டு இதழ்களில் கூட்டுறவின் பெருமையையும் அதை அடிப்படையாய்க் கொண்டு இயங்கும் இஸ்ரேல் விவசாயப் பண்ணைகளின் மாபெரும் சாதனைகளையும் பற்றி எழுதினேம். இவ் விதழில் நம் நாட்டின் விவசாய நிலையை ஆராய்வோம்.

இஸ்ரேலின் விவசாய முன்னேற்றத்தை ஓர் குறிக்கோளாய் எடுத்துக் காட்டினேம், ஆனல் அதை முழுதும் பின்பற்றுவது பயனற்றது.

இஸ்ரேல் விவசாயத்தில் காணும் முக்கிய அடிப்படை அம்சங்களை நன்குணர்ந்து அவற்றை நம் நாட்டுக்கேற்ப அமைப்பதே சிறந்த முறை. ஒவ்வொரு அணுவுக்கும் தனிப்பட்ட சக்தியும் ஆற்றலும் உண்டு. இவ்வாற்றலை அறிந்து அதற்கிணங்க இயங்கின் அணுவுக்கும் உலகிற்கும் நன்மை உண்டு.

அதேபோல் ஒவ்வொரு மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் தத்தமக்குரிய பண்புகளுண்டு. இவை பெரும்பாலும் அவ்வினத்தின் பூர்வீக வாழ்க்கை வரலாற்றில் வேரூன்றி நிற்கக்காணலாம். அதை அறிந்து ஒழுகில் ஆக்கப் பெருக்கம் அதி சீக்கிரம் கிட்டும்.

நம் நாட்டு விவசாய முறைகள் வெகு விசேட முறையில் தொன்றுதொட்டு இயங்கி வந்திருக்கின்றன. வரண்ட பிரதேசத்துக்கும் குறைந்த முதலீட்டுக்கும் சனப் பெருக்குள்ள சூழ் நிலையிலும் போதிய வருமானம் அளிக்கவல்ல முறைகளை எம் முன்னேர் கையாண்டிருக்கின்றனர்.

சுவாத்திய நிலை, பூமிப் பண்பாடு, தாவர இயல், மிருக நலன், மானிட முன்னேற்றம் ஆகிய அம்சங்களை ஒன்றுக்கொன்று இன்றியமையாது இணைக்கிப் பயனடையும் முறைகளைக் கையாண்டு வந்திருக்கின்றனர்.

பொருளாதார, சமூக, கலாச்சார முறைகளை விவசாயத்துடன் சேர்த்தமைத்து சரீர மனே தத்துவங்களை வளர்க்கும் முறைகளைப் பின்பற்றினர். தற்காலிகமாகப் பணப்பேராவா கொண்ட மக்கள் உலகின் அமைப்பை நன்குணராது சரீர சுகபோக வாழ்வே கதி என எண்ணி எல்லையில்லா ஊண் உடை உறைவிடம் உல்லாசம் ஆகியவற்றை சேகரிக்க பொருள் தேடி உலகத்தையே விழுங்கிடி பூமாதேவியின் புனித பண்பாட்டைப் பாழாக்கி பல்வேறு தேசங்களைப் பாலைவனமாக்கி வருகின்றனர்.

ஆனல் நம் நாட்டில் பல கோடி மக்கள் பல்வேறு யூகங்களால் பூமியைப் பண்புடன் பயிரிட்டு வாழ்ந்து வந்திருக்கின்றனர். இதன மர்மம், பூமியில் எடுப்பதை விடப் பூமிக்கும் கொடுப்பதே. 'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்' என்பது எம் வாழ்வின் குறிக்கோள். எம் பொருளாதார சமூக கலாச்சார வாழ்வின் அடிப்படையும் இதுவே.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சிறுதோட்டச் செய்கையை ஆழ்ந்து ஆராயின் அதன் பெருமையை நன்குணரலாம்.

ஒரு ஏக்கர் காணியில் மூன்று தலைமுறை மக்கள் ஒரு பெருங்குடும்பமாய் திடதோள் படைத்த தேகத்தினராய் நோயற்று வாழ்ந்து; குலப்பெயரோங்க வருடா வருடம் கோவில் குளங்களைக் கட்டி சிற்ப, சங்கீத நடனக் கலைகளை வளர்த்து, மெய் மறந்து தெய்வத்தை நேரில் கண்ட அரும் தவப் பெரு மக்களைப் பெற்றெடுத்த நாடு நம் நாடு.

ஆனல் தற்காலிகமாக நாகரீக வாழ்வால் குடும்பம் குடும்பமாய்ப் பிரிந்து குறுகிய மனப்பான்மையால் குலமே அழிந்து கோயில் குளம் இல்லாது குட்டிச் சுவர்களாய் வாழும் நம் அரசாங்க ஊழியப் படையைப் பார்க்க நம் கதி என்னே என்று எண்ணிக் கலங்கினேம்.

இலங்கையின் வரண்ட பிரதேச விவசாயக்குடியேற்றங்களைத் தீர ஆராய்ந்து பி. எச். பாமர் (B. H. Farmer) என்னும் ஆங்கில நிபுணர் ஓர் அரிய நூலை இயற்றி இருக்கிருர். அதில் விஞ்ஞான ரீதியில் பல புள்ளி விபரங்களுடன் சிறு தோட்டச் செய்கையே வரண்ட பிரதேசங்களுக்கு கந்தது என்று சுட்டிக்காட்டியிருக்கிருர்; அத்துடன் தென் இந்திய, யாழ்ப்பாண விவசாய முறைகளை மெச்சி எழுதியிருக்கிருர். இந் நூல் நம் விவசாயிகளின் நுண்ணறிவை நன்குணர்த்துகின்றது.

1958ம் ஆண்டில் நம்மவரில் பலர் வவுனியாப் பகுதியில் 1000, 500, 100, 50 ஏக்கர் காணிகளை எடுத்து பல்லாயிரம் ரூபாய்களை செலவிட்டு அவற்றைத் திருத்திப் பயனடைய முடியாமல் இருந்த முதலையும் இழந்து காடோடு காடாய் விட்டு விட்டுப் போயிருக்கிருர்கள்.

இவர்கள் விவசாயத்தில் இறங்கு முன் அதற்குரிய அம்சங்களை ஆராய்ந்திருந்தால் இக் கதிக்கிலக்காகி இருக்க மாட்டார்கள். பணப் பேராவா கொண்டு அந்நிய முறைகளை ஆழ்ந்த அறிவும் அனுபவமும் இன்றிக் கையாண்டு ஓர் அரிய சாதனையை முளையிலே முறித்தெறிந்துவிட்டனர். அதுவுமல்லாமல் விவசாயத்தில் இறங்கவிருக்கும் பலரைக் கேலிபண்ணிப் பயமுறுத்தி அத்துறையில் இறங்கா வண்ணம் செய்து வருகின்றனர். 'பேராசை பெரும் தரித்திரம்' என்பது எம் மொழியில் ஓர் சரியான பழமொழி சிறியவற்றைச் சீராய்ச்செய்வதே எம்மினத்துக்குரிய நல்வழி அதைக் கடைப்பிடித்தால் பெரும் அழிவின்றிக் கடைந்தேற முடியும்.

சிறு தோட்டச் செய்கையின் விசேட அம்சங்களை அனுபவத்தில் கண்டவர்களே அறிவார்கள். நிலத்தைப் பண்படுத்தவும், வேலி அடைக்கவும், நீர் பாச்சவும், விதைக்கவும், காக்கவும், அறுக்கவும், [illegible] வும் செயல்பட்டு வெகு [illegible]

மாயிருக்கும். தவிர ஆண், பெண், முதலியோர், இளையர் யாவரும் ஒன்று சேர்ந்து காலை தொடக்கம் மாலை மட்டும்பல்வேறு வேலைகளில் ஈடுபட்டும் பயன் பெறப் பலவசதிகளுண்டுஒவ்வொரு பயிரையும் தன் உயிர்போல் காத்து ஒவ்வொரு களையையும் காலன் போல் களைந்து பண்புடன் பயிர் செய்ய முடியும். பூமி, தாவரம், மிருகம், மனிதன் யாவும் அழிவுப் பொருளின்றி ஒன்றுக்கொன்று உறுதுணை

**'உழவன்'**

யாய் நின்று பயனளிக்க வழி வகுக்க முடியும். இவை யாவற்றையும் பல யூகங்களாகக் கற்றறிந்த நம் முன்னேர் சிறுதோட்டச் செய்கையை ஓர் திருப்பணி நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றனர்.

சிறு தோட்டச் செய்கையின் பொருளாதார நிலையை ஆராயின் அதன் சிறப்பு ஆச்சரியமாய்த் தோன்றும். மூன்று ஏக்கர் காணியைப் பண்படுத்தி ஓர் கிணறு வெட்டி, மாடு, வண்டில், கலப்பை வைத்து, ஏற்றுக் கிடாரம் இயக்கி, சிறு கொட்டில் கட்டி, 4 மாடு, 6 ஆடு, 20 கோழி, தேனீ வளர்த்து வர ரூபாய் 5000 முதலீடு போதியதாய் இருக்கும். இத் தோட்டத்தில் ஒரு ஏக்கரில் வரம்பு கட்டி, நாற்று நட்டு நீர்பாச்சி நெல் விளைத்தால் 60, 80 புசல் விளையும். இவ்வருடம் பூராவும் முழுக் குடும்பத்துக்கும் போதிய அளவு பாவித்து மீதியும் இருக்கும். மற்ற ஒரு ஏக்கரில் 5000 மிளகாய்க் கன்றுகள் நட்டால் ஆறு மாதங்களில் 10,000 ரூபாய் பலன் அடையலாம் இன்னும் ½ ஏக்கரில் வெண்காயம் நட்டால் மூன்று மாதங்களில் 2000 ரூபாய் எடுக்கலாம். எஞ்சிய ½ ஏக்கரில் குடிசையைக் கட்டி காய் கறி பழவகை ஆடு, மாடு, கோழி, தேனீ வளர்த்தால் தினமும் பால் பழம், வெண்ணெ தெளி தேன் உண்டுநோயற்றுவாழலாம்.

சிறுதோட்டங்களைக் கிராம முறையில் அமைத்து 6, 8 தோட்டங்கள் கூட்டுறவில் இயக்கி உற்பத்தி, விற்பனை, போக்கு வரத்து, சேகரிப்பு, விளம்பரம் ஆகியவையை நடத்தினல் பன்மடங்கு பயன் அடையலாம். வருமானத்தைச் சேமித்து ஆக்க முறையில் செலவிட்டுப் பொருளாதார நிலையைப் பெருக்கினல் சமூக முன்னேற்றத்துக்கும் கலாச்சார புத்துணர்வுக்கும் வழி வகுக்கலாம்.

விவசாய வருவாயால் நாடு நகரங்களைச் சிறப்புடன் அமைத்து நம் நகரமெல்லாம் காவேரிப்பூம் பட்டினம் போல் மாடமாளிகை கூட கோபுரங்களுடனும், தாமரைத் தடாகம், பூஞ்சோலை திகழ வீடெங்கும் சிலம் பொலிக்கச் சீவிக்கலாம். இவை யாவற்றையும் அகக் கண்ணுல் கண்ட ஔவைக் கிழவி 'வரப்புயர' என்னும் ஆறும் மந்திரத்தை ஓதி எம்மினத்துக்கு ஓர் அரிய வழியை வகுத்துக் கொடுத்தாள். இவ்வழியில் வாழையடி வாழை யென வந்த பல குடும்பங்கள் யாழ்ப்பாணக் குடா நாட்டில் இன்றும் இருக்கின்றன.

வேலையில்லாது திண்டாடும் நம் இளையர் சிறு தோட்டச்செய்கையை சிறப்பாய்க் கற்று மன்னர், முல்லைத்தீவு, வவுனியா, திரிகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள காடுகளை வெட்டி நாடாக்கி எம் பொருளாதார நிலையைப் பெருக்கி ஓர் நவீன கலாச்சாரப் புரட்சிக்கு வழி வகுப்பின் எம் மினம் கடைந்தேறும் என்பதில் ஐயமில்லை.

இத் திருப்பணியில் நம் மினத்தின் பணம் படைத்தோரும் கற்றறிந்த பெருமக்களும் கமக்காரரும் இளையர்களும் திரண்டு வந்து ஒன்று நின்று வழிபடுவார்கள் என்பதே எம் கனவு: இது நினைவாகுமா? கூடி வாழ்ந்தால் வாழலாம்.

● இத் திருத்தொண்டில் ஈடுபட்டியங்க விரும்புவோர் இப்பத்திரிகை மூலம் 'உழவனுடன்' தொடர்புகொள்ளவும்.

---

# மொழி, இன வெறியர்கள் யார்?

## ஆளுங்கட்கியினரா? தமிழர் கூட்டணியா?

## ஒருமொழி, ஒருமதம் இதுதானு 'மார்க்சீயம்'?

### விதண்டாவாதி வி. பி. யே! பதில் சொல்!!

தமிழ் மக்கள் ஏமாளிகளாம் தனக்குதான் ஏதோ கனக்கத் தெரியுமாம், தான் சொல்வதை எல்லாம் அவர்கள் உண்மை என்று கேட்கிருர்களாம். இதையெல்லாம் யார் சொன்னது? இதைச் சொன்னது சிங்கள பிரமுகர் எவரும் அல்ல திரு. வி. பொன்னம்பலம்தான் இப்படி தமிழ் மக்களை பற்றி நினைக்கின்ளுர்.

நான் திரு. வி. பொன்னம்பலத்தின் மாணவன், அவருடன் சிலகாலம் பழகியவன் அவருடைய திறமையான பேச்சில் மயங்கிய நாம் அவரை ஒருநாள்கேட்டோம் ''உங்களால் எப்படி திறமையாக பேசமுடிகின்றது'' என்று. அதற்கு அவர் சொன்னபதில் இது ''மேடையில் தாம் பேசும்போது கூட்டத்தில் இருப்பவர்கள் எல்லோரும் தன்னைவிட அறிவில் குறைந்தவர்கள் என்றும் தாம் எதைச் சொன்னலும் நம்பும் ஏமாளிகள் என்றும் நினைப்பாராம்—பேச்சு சரளமாக வரும்'' என்று இப்படி எங்களுக்கு அன்று பதில் தந்தார் —அவருடைய இன்றைய பேச்சுக்களும் அறிக்கைகளும் அன்று சொன்னதை இன்று ஞாபகப்படுத்துகின்றது. அதனுல்தான் தமிழ் மக்கள் ஏமாளிகள் என்று கண்டபடி பேசியும் எழுதியும் தமிழ் மக்களுக்கு கரடி விடுகின்ருர்.

[illegible] ஏன் மொழி வெறியை [illegible] கிருர்கள் என்று கேட்கிருர் - மொழி உயர்வு எங்களிடம் இயற்கையாகவே உள்ளதே. அதை வெறியாக்கியது தமிழர் கூட்டணி அல்ல அப்படி செய்தாலும் அது தவறானதல்ல. ஏனெனில் காந்தியின் விடுதலைப்போரிலும்சுதந்திர வெறி இருந்தது. எனவே அது தவறல்ல.

ஆனல் தமிழர் கூட்டணியைவிட மொழி வெறியை வளர்ப்பது வி. பி. சார்ந்துள்ளது முக்கூட்டு வெறியர்கள் முன்னணியேதரப்படுத்

**கனக-தவராசன்**

தல் என்னும் இனப்படுத்தலைக் கொண்டுவந்தார்கள். குடியரசிலே எமது உரிமைகளை விழுங்கினுர்கள். சிங்கள திணிப்பு, புத்தமததிணிப்பு நடத்துகின்றுர்கள்.—தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை அமைத்தார்கள். இப்படி எமது உள்ளங்களை எல்லாம் எரிமலையாக்கும் செயலைச் செய்துவருபவர்கள். அவர்களே.

திரு. வி. பொன்னம்பலம் சொல்கிருர்— சோவியத் நாட்டின் தேசிய இனங்களும் மதங்களும் சுதந்திரமாக உள்ளனவாம். அதற்காக இலங்கையில் தங்களை ஆதரிக்க வேண்டுமாம்! பேய்க் காட்டுகிருர் எங்களை! வி. பொன்னம்பலத்தாரே! சோவியத் நாட்டில் பனிப் பெய்கிறதாம் இங்கே குளிர் காயுங்கள்.

இலங்கையில் அவருடைய கட்சி பிரதேச சுயாட்சிக்காகப் போராடுகின்றதாம். அக்கட்சியின் கொள்கைகளில் அதுவும் பிரதானமானதாம். நான் கேட்கிறேன் வி. பி. அவர்களே உங்கள் கட்சி பிரதேச சுயாட்சிக்காக இதுவரை நடத்திய போராட்டங்கள் எத்தனை? முயற்சிகள் எத்தனை? இனங்களுக்கும், மதங்களுக்கும் சுதந்திரமும் சமத்துவமும் கொடுக்க செய்த முயற்சிகள் என்ன? நீர் சொல்லமாட்டீர் — ஏனெனில் உங்கள் கட்சி இலங்கையிலே உண்மையான சமவுடமை ஏற்படக்கூடாது என்பதற்காக முதலாளித்துவ முயற்சியால் அமைக்கப் பட்ட கட்சியல்லவா?

பிரதேச சுயாட்சி கோரும் கூட்டாட்சி அமைப்பை தமிழர் கூட்டணி அரசியல் நிர்ணய சபையில் கொண்டு வந்தபோது அதை எதிர்த்தவர்கள் அல்லவா உங்கள் கட்சியினர்! பௌத்த மதத்தை அரசமதமாக்கிய, சிங்கள மொழியை அரச மொழியாக்கிய — தமிழர் உரிமையை அழித்த புதிய அரசியல் அமைப்பை கொண்டு வந்தவர்கள் அல்லவா நீங்கள்! தெற்கே இவைகள் எல்லாவற்றையும் செய்துவிட்டு வடக்கே தமி

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் அபிமானத்துக்குரியவரே மாநாட்டை ஆரம்பித்து வைக்க வேண்டும்!

## தமிழ் தலைவர்களை அவமதிக்கும் போக்கை தமிழாராய்ச்சி மன்றம் கைவிட வேண்டும்!

### பிரேத பரிசோதனையாக மாநாடு இருக்கக் கூடாது!

**குரும்பசிட்டி கனகரத்தினம்**

**சுதந்திரன் கருத்தரங்கம்**

தமிழினத்தின் பெருமைக்குரிய—மதிப்புக்குரிய தலைவர்களை அவமதிப்பது தமிழாராய்ச்சி மன்றத்தினருக்கு கைவந்த கலை; வண. தனிநாயக அடிகளார் மட்டுமல்ல; பாரீஸ் மகாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஜனாப். எஸ். எம். கமாலுத்தீன் கூட இந்தக் கீழ்த்தரமான நையாண்டியில் இறங்கிச் சேற்றை அள்ளிப்பூசிக்கொள்கிறார்.

மகாநாட்டு நிகழ்ச்சிகளில் தமிழை அதிகம் பயன்படுத்தாதமைக்குக் கண்டனம் தெரிவித்த மா. பொ. சி. அவர்களை 'சென்னையின் செங்கோல் செலுத்தும் பெரியார்' எனக்கிண்டல் செய்யும் அதே வேளையில் தமிழகத்திலிருந்து முஸ்லீம் அறிஞர்கள் எவரும் கலந்து கொள்ளாததையிட்டு அங்கலாய்க்கிறார்.

'தமிழ்' 'தமிழினம்' என்ற உணர்ச்சிக்குத் தமிழர்கள் அடிமையாகக் கூடாதென்று ஜனாப். கமாலுத்தீனுக்கு நேர் எதிரான கருத்தைத் தெரிவிக்கும் அதே ஜனாப். கமாலுத்தீனின் அருமை நண்பர் கலாநிதி கைலாசபதியவர்கள் தமிழக முதல்வர் பாரீஸ் மகாநாட்டில் கலந்து கொண்ட நிகழ்ச்சியை ஒரு சினிமா நடிகையை விமர்சிக்கும் பாணியில் நம் நாட்டு தினசரியொன்றில் விமர்ச்சித்து எழுதியதைப்பார்த்தோம்.

அண்மையில் டாக்டர் ஆனந்த ராஜன் என்பவர்—இவர் மகாநாட்டு இணைச் செயலாளர்களுள் ஒருவர் எனத் தம்மை அறிமுகப் படுத்திக்கொண்டவர், தமிழக முதல்வர், மு. கருணாநிதி அவர்கள் கூட நிபந்தனைகளுக்குட்பட்டே அழைக்கப்படுவார்; அரசியல் பேசினால் வெளியேற்றப் படுவார்; ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்து அது அனுமதிக்கப்பட்டால் மட்டுமே கலந்துகொள்ள அனுமதி வழங்கப்படும் என்ற ரீதியில் ஒரு போடு போட்டுள்ளார். தமிழ் மக்களால் தமது தலைவர்களென ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிஞர்களெல்லாம் இவர்களுக்குக் கிள்ளுக்கீரையாகத் தென்படுவதைப் பார்த்தால் இந்த 'நவீன' ஆராய்ச்சியாளர்கள் யார்? எங்கிருந்து இம்மன்றத்துக்குள் வந்தார்கள்? இப்படிப்பேச இவர்களுக்கு அனுமதி வழங்கியது யார்? இவர்கள் தமிழினத்துக்கு என்ன தியாகஞ் செய்தார்கள் என்ற ஐயப்பாடு எழுவது இயற்கை!

### தமிழகந் தலைவர்கள் தியாகம்

பார்ப்பனீயம் தலைவிரித்தாடிய தமிழகத்தில் ஒரு 50 ஆண்டுகளுக்கு முன் ஒரு பிராமணருடன் பக்கத்தில் அமரவோ அவருடன் கைகோர்த்துக் கொண்டு செல்லவோ முடிந்ததா? எங்கும் எதிலும் ஆந்திரர்களதும் கேரள மக்களதும் ஆதிக்கம் நிறைந்திருந்த தமிழகத்தில் ஒரு தமிழனை ஆட்சி பீடமேற்ற எவ்வளவு பேரராட்டங்கள் நடைபெறவேண்டியிருந்தது? பானகல் அரசர், முனுசாமி நாயூடு, பொப்பிலி அரசர், சர். கே. வி. ரெட்டிநாயூடு, பிரகாசம் பந்துலு போன்ற தமிழரல்லாதோர் தமிழக ஆட்சியில் இடம்பெற்ற காலத்தில் ஒரு மாபெரும் அமைதிப் புரட்சியை மேற்கொண்டு தமிழன் கைக்கு ஆட்சியைக் கொண்டுவர எவ்வளவு தியாகங்களை செய்தார்கள் இத்தலைவர்கள்?

'மதராஸ் மனதே,' 'அரவ ராஜாஜீ சாவாலா ஆந்திர ராஜ்யம் காவாலா' என்ற கோஷங்களை முறியடித்து, தமிழனுக்குத் தமிழகத்தை மீட்டு, தமிழக எல்லைகளை விரிவுபடுத்தி ஆட்சி பீடத்தில் தமிழைக் கொணர்ந்து, தமிழர் மத்தியில் புரையோடிப்போயிருந்த மூட நம்பிக்கைகளை ஒழித்து, பட்டி தொட்டியெல்லாம் கல்விக்கூடங்களை ஏற்படுத்தித் தமிழர் அறிவுக் கண்களைத்திறந்து அளப்பருந் தொண்டாற்றிய ராஜாஜி காமராஜர், மா. பொ. சி, பக்தவசலம், அண்ணா, கருணாநிதி போன்றோரின் தனிப்பட்ட வாழ்க்கையே எழுச்சியுற்ற தமிழகத்தின் இன்றைய வரலாறு. அவர்களின் தியாக வாழ்க்கையே இன்றைய பரந்த தமிழகம்!

தமிழ்ப்பாடல் இடம் பெற்றது 'தீட்டு'—பெரிய பாவகரமான செயல்—எனக்கூறிக் கச்சேரி நடக்கும் மேடையைத் தண்ணீர் கொண்டு சுத்தம் செய்த பின்பே தெலுங்கு ஹிந்துஸ்தானி கீர்த்தனைகளைப்பாடுவார்களாம் அந்தக் காலத்துப்பாடகர்கள்! இன்றைய தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் தமிழிசை முழங்குகிறதே இது யாரால் ஏற்பட்டது? ஏன் இன்றைய நவீன தமிழ் இலக்கிய உலகுக்கு, நாடகத்துறைக்கு இத்தலைவர்கள் செய்த தொண்டு சாமானியமானதொன்று? இப்படிப்பட்ட தியாகச் செம்மல்களைக் கிண்டல் செய்வது உலகத்தின் முழுத்தமிழ்ச் சமுதாயத்தையுமே நையாண்டிசெய்வது போன்றதே! இவர்களுள் சிலரையாவது அழைத்துக்கொண்டாடப் படாத தமிழர் சம்பந்தப்பட்ட எந்தவொரு சர்வதேச விழாவும் பூரணத்துவமடைந்ததாகக் கருத முடியாது! இது உண்மை! வெறும் புகழ்ச்சி இல்லை!

### தமிழாராய்ச்சி மன்றமும் அரசியலும்

உலகத்தமிழாராய்ச்சி மன்றத்தின் முதல் மகாநாட்டை ஆரம்பித்து வைத்தவர் அன்றைய மலேசியாவின் பிரதமரான துங்கு அவர்களாகும். முழு மலேசியாத் தமிழ் சமுதாயத்தினதும் பேரன்புக்குப் பாத்திரமாக இருந்த அவரால் அம்மகாநாடு தொடங்கி வைக்கப்படுவதை ஒரு பெரும் பேறாகக் கருதினார்கள் அந்நாட்டுத் தமிழர்கள்.

இரண்டாவது மகாநாடு சென்னையில் நடைபெற்றபோது பாரதக்குடியரசின் தலைவராக விருந்த டாக்டர் ஜாகீர் உசேன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அரசியலுக்கு அப்பாற்பட்டது அவரது பதவியென்றாலும் தமிழக ஆட்சிபீடத்தில் தி. மு. க. இடம் பெற்றிருந்ததும் பேரறிஞர் அண்ணா அவர்களின் தனிப்பட்ட செல்வாக்கும் சென்னை மகாநாட்டில் அரசியல் நிழல் படிவதற்கு ஓரளவு காரணமாக அமைந்தன.

பாரீசில் நடந்த மூன்றாவது மகாநாட்டை ஆரம்பித்து வைப்பதற்காக திரு. மல்கம் ஆதிசேஷயா தெரிந்தெடுக்கப்பட்டிருந்தும் அந்தப் பொறுப்பு தமிழக முதல்வர் கரங்களில் வீழ்ந்தது. இந்நிலையில் நம் நாட்டில் நடைபெறவிருக்கும் மகாநாட்டை ஆரம்பித்து வைப்பது யார் என்ற கேள்வி எழுகிறது.

நிதானத்தைக் கடைப்பிடிக்கவேண்டியஒருவிஷயத்தில் தம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க விழுந்தடித்துக் கொண்டு முந்தியுள்ள மன்றத்துச் சில்லறைகள் மகாநாட்டின் இலட்சியத்தையே திசை திருப்பி விட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நடந்த மூன்று மகாநாடுகளிலும் பார்க்க முற்றிலும் புதியதொரு சூழ் நிலையில், இந்த மகாநாடு இலங்கையில் நடைபெற வேண்டியுள்ளதென்பதை மன்றத்து முன்வரிசைப் பிரமுகர்கள் முதற்கண் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஈழத்தமிழர்கள் மத்தியில் பரந்தளவு விரக்தியும் சோர்வு மனப்பான்மையும் இன்று தலைதூக்கியிருப்பது கண்கூடு. மகாநாட்டின் வெற்றிக்கு உழைக்கவேண்டிய தமிழ் வாலிபர்களிடையே இன்று தம் எதிர்காலத்தை எப்படி அமைத்துக்கொள்ளலாம் என்ற போராட்டமே மேலோங்கியுள்ளது. இந்நிலையில் தம் மொழியின் பெயரால் நடக்கும் இந்த மகாநாடாவது தம் பெருமையையும் தம் மொழி பண்பாட்டின் பெருமையையும் போற்றவும் பேணவும் ஒரு கருவியாக அமைய வேண்டுமென முழு ஈழத்தமிழ்ச்சமுதாயமும் எதிர்பார்ப்பதில் தவறில்லை!

எனவே மகாநாட்டின் வெற்றி மன்றத்தினரின் நிதானமானபோக்கில்தான் தங்கியுள்ளதென்பதையும் தமிழ் மக்கள் முகஞ் சுளிக்காத முறையில் அவர்கள் மத்தியில் ஏகோபித்த ஆதரவு கொண்ட ஒருவரைத் தேர்ந்தெடுத்து மகாநாட்டை ஆரம்பித்து நடாத்துவது சாலவும் சிறப்புடையதாகுமென்பதையும் கூறி வைக்கவிரும்புகிறேன்.

### மகாநாட்டில் கலந்து கொள்வோர்

ஆராய்ச்சிக் கட்டுரை அனுப்பி அது அனுமதிக்கப்பட்டால் மட்டுமே அழைப்பு என்ற மன்றத்தின் நடைமுறை மாற்றியமைக்கப்பட வேண்டியதொன்று! உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழர்களிடையே தமிழபிமானம் மிக்க தலைவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். தத்தம் நாடுகளில் தமிழ்மொழியையும், தமிழர் தம் கலை, கலாச்சாரங்களையும் நிலை நாட்ட மகத்தான பணியை இவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். தம்பணிக்கு ஆதரவு

(9-ம் பக்கம் பார்க்க)

**மக்கள் குரல்**

# இராணுவத்தினர் கீரிமலையில் நடத்திய காட்டுமிராண்டித்தனம்!

இராணுவத்தினரின் காட்டுமிராண்டித்தனம் கீரிமலையிலும் இரவில் தனியாகப் போவோர் வருவோரிடம் காட்ட ஆரம்பித்துள்ளனர்.

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று (11-2-73) இரவு எட்டு மணியளவில் கீரிமலை அம்பாள் ஆலயத்தில் நடந்துவரும் திருவிழா உற்சவத்தின் பொருட்டு அங்கு சென்று தரிசனம் செய்து விட்டு எனது துவிச்சக்கர வண்டியில் வீடு திரும்பிவருகையில் கீரிமலைச் சந்தியிலிருந்து மேற்கே செல்லும் பிரதான வீதியில் எதிர்பாராத விதமாக ராணுவத்தினர் மூவர் என்னை வழிமறித்து தமது கைவரிசையை காட்டிய பின்னர் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த என்னிடம் ஏழு ரூபா கொண்ட மணிப் பேர்சையும், சுமார் இருநூற்று ஐம்பது ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தையும் பறித்தெடுத்தனர்.

அதன்பின்னர் பேசத்தகாத வார்த்தைகளால் பேசி ''வண்டியை தலையில் சுமந்து செல்லடா பறையா'' என்று சிங்கள மொழியில் கூறினர். கவலைப்பட்டுக்கொண்டிருந்த நான் தப்பினேன் சிவனே என்று நினைத்துக்கொண்டு வண்டியோடு வீடு நோக்கினேன்.

இத்தனையும் நடந்தது சுமார் இரண்டு நிமிடத்திற்குள்தான். எனது துவிச்சக்கரவண்டியில் மின் விளக்கு இருந்ததென்பதும், ராணுவத்தினர் மூவரும் மதுவருந்திய வெறியில் நின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுபற்றி எனது நண்பர்களிடம் பேசியபொழுது அவர்கள்—இன்று நடப்பது ஜனநாயகக் குடியரசு ஆட்சி அல்ல. (ராணுவத்தினரின்) வெறி அரசுதான் நடப்பதாகவும் அவர்களோடு கதைக்கப்போனால் நம் உயிருக்கே உலைவைக்கத் தயங்கமாட்டார்களென்றும், மேலதிகாரிகளுக்கு புகார் செய்தாலும் அவர்கள் கண்மூடி மவுனியாக இருந்துவிடுவார்களென்றும் கூறினார்கள்.

இன்றைய அரசியலார் தமது உயிர்நலன் பதவி கருதியே பாதுகாப்புப்படையினரை அதிகப்படுத்தியுள்ளோம் என்று கூறுமல் ''நாட்டு மக்களின் நலன் கருதியே பாதுகாப்புப்படையினை அதிகப்படுத்தியுள்ளோம்'' என்று கூறுவதன் கருத்து யாது?

இதுதானா ஜனநாயகம் என்பது? சோசலிசம் என்ற போர்வையின்கீழ் பசுத்தோல் போர்த்திய புலிகளென நாட்டின் பொருளாதாரத்தைச் சூறையாடி வரும் சுயநலவாதிகளின் கையில்தான் இன்றைய அரசாங்கமென்னும் குதிரை வண்டியின் கடிவாளம் கொடுக்கப்பட்டுள்ளதென்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை என்பதை மக்கள் உணராமல் இல்லை. என்றோ உணர்ந்துவிட்டனர்.

இன்று மக்கள் விரும்பினாலென்ன, விரும்பாவிட்டால்தானென்ன — மந்திரிமார் தம் இஷ்டப்படி அரசாங்கத்தை நடத்துகின்றனர். பொதிசுமக்கும் கழுதைகளென மக்கள் அதிக வரிகளை சுமக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

ஆஸ்பத்திரியில் நோய்வாய்ப்பட்ட மக்கள் படுப்பதற்கு கட்டிலின்றி தரையில் (விறுந்தையில்) கிடந்து அவஸ்தைப்படுவதைப் பார்த்துக்கொண்டு காலம்சென்ற திருபண்டாரநாயக்காவிற்கு $3\frac{1}{2}$ கோடி ரூபா செலவில் ஞாபகார்த்த மண்டபம் கட்டப்படுவதும் நல்லைநகர் நாவலருக்கு நான்குலட்ச ரூபா செலவில் மண்டபம் கட்டப்படுவதுமான இன்றைய அரசாங்கத்தின் செயல் மிகவும் பாராட்டுக்குரிய தொன்றாகும். அதே மண்டபத்தை ஆஸ்பத்திரியாக கட்டினால் எத்தனை மக்கள் பெரும் பயன் அடைவார்களென்பதை ஏன் உணரவில்லை.

—மு. இராசதேவன்,
[illegible],
தெல்லிப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வாவுக்குக் கறுப்புக் கொடியாம்!

## சிந்தை கலங்கிய தினகரனும் தினபதியும் வெளியிட்ட சின்னத்தனமான செய்தி!

### மாதகலில் உண்மையில் நடைபெற்றதென்ன?

19-2-73ல் திறக்கப்பட்ட மாதகல் செட்டிகேணிக் கரை பாலத்தை சென்ற தேர்தலின்போது வி. பி. தான் கட்டித் தருவதாக தேர்தல் மேடைகளில் கூறினார். தேர்தல் முடிந்ததும் அப்பாலம் பற்றி எந்த நடவடிக்கையும் எடு[illegible]லை.

பின்பு தமிழ[illegible]தந்தையும் பண்[illegible]ப்பு கிராமசபையினரும் திரு. முத்துலிங்கம் என்பவரும் இணைந்து இப்பாலத்தை கட்டி முடித்தனர். இத் திறப்பு விழாவுக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நல்லநாதன் தந்தை செல்வா, வி. பொன்னம்பலம் ஆகியோர் அழைக்கப்பட்டனர். ஆகவே இது அரசியல் கலப்பற்றது.

திறப்புவிழா 5,30மணிக்கு ஆரம்பமானது. அதே நேரத்தில் வி. பி. மாதகலில் நின்றும் பாலத்திறப்பு விழாவில் கலந்து கொள்ளவில்லை. மனச்சாட்சி உறுத்தும் தானே, ஒளித்து விட்டார். இதை மறுக்க முடியுமா?

ஊர்வலம் 5,30 மணிக்கு ஆரம்பமானது தந்தை செல்வாவும் உதவி ஆணையாளரும் மேளதாளங்களுடன் அழைத்து செல்லப்பட்டனர். ஊர்வலம் பாலத்தடியில் இருந்து 200 யார் தூரத்தில் வரும்பொழுதுதே திரு. நாகராஜா என்பவர் மட்டும், பாலத்துக்கும் தரைக்கும் இடையில் மண் மட்டமாக நிரப்பாதபடியால் இதுபோக்குவரத்து இடைஞ்சல் தருவதாக கூறி ஒரு குடைச் சீலையை கொண்டு வந்து தூக்கி பிடித்தார். உடனே [illegible]னராசா என்றவர் நாகராசாவை ஏச, அவர் கீழே இறங்கி சைக்கிளையும் எடுத்துக் கொண்டு விழாவுக்கும் நிற்காமல் ஓடிச் சென்றுவிட்டார்.

ஆகவே அந்தக் குடைச் சீலையைக் கூட நாகராஜா கிராமசபைக்கு காட்டினாரே யொழிய தந்தைக்கோ உதவி ஆணையாளருக்கோ காட்டவில்லை.

தந்தைக்குத்தான் கறுப்பு கொடி காட்டுவதாக நாகராஜா அந்நேரத்தில் கூறி இருப்பாரே ஆனால், நிச்சயம அவர் இன்று இருக்க வேண்டிய இடம் வேறு.

பின் உதவி ஆணையாளரால் பாலம் திறந்து வைக்கப்பட்டது. விழா நடைபெறும் பொழுதே கள்ளுப் பரிசோதகர் இருவர் அதில் ஒருவர் சிங்களவர், மேடைமீது ஏறி தந்தையின் காலை முத்தமிட்டு, தந்தை மீது உள்ள மதிப்பை எடுத்துக் காட்டினர். அங்கு இளைஞர்கள் எவருமே கோசம் எழுப்பவில்லை. இவற்றை எல்லாம் மாதகல் கம்யூனிஸ்ட் கட்சிக் கிளை தலைவர் நடராசா மேடையில் அவதானித்து கொண்டிருந்தார்.

ஆகவே நாகராசா என்பருக்கு ஒரு சவால் விடுகிறேன். தந்தைக்கு எதிராக இளைஞர் கோசம் எழுப்பியதாகவும், அந்நேரத்தில் நந்தைக்குத்தான் கறுப்புகொடி காட்டுகிறேன் என்று கூறி நாகராசா கறுப்பு கொடி காட்டினர் என்பதை நிருபித்தால், நான் மொட்டையடித்து உண்ணாவிரதம் இருந்து இறக்கவும் தயார். அதுவும் திருப்தியளிக்காவிட்டால், மாதகல் கம்யூனிஸ்ட்கிளைத் தலைவர் நடராசா முன்பும், ஏனைய அங்கு மேடையில் வீற்றிருந்த பெரியோர் முன்பும், துணிவிருந்தால் இதை நிருபிப்பாரா? மட்டி மடையர்களின் பேச்சை நம்பி அறிக்கை விட்ட நாகராஜாவுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள், பொய் அறிக்கை விட்டு தமிழினத்தை ஏமாற்றிய காலம் அந்தக்காலம் என்பதை நாகராஜாவுக்கு கூறி வைக்க விரும்புகிறேன்.

—எஸ். ஜே வி. ராஜகுமார், மாதகல்.

---

## சுதந்திரத்திற்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தாய் மொழியைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன் என்று சூளுரைத்த மறக்குலம் வந்த தமிழினம்— சோழவேந்தி, கொடும்பகை அழிக்க வாளேந்தி, தோள் தட்டி வேல் எடுத்து வந்த முடியரசை சாய்த்த தமிழன் வழி வந்த தமிழன் நிரந்தர அடிமையாகவே வாழமாட்டான். கொழுந்து விட்டுப் பற்றிப் பிடித்த அக்கினி ஜுவாலையுடன் சீறி எழுந்து விட்ட தீயை அணைக்கப் பஞ்சு மூட்டைகள் பயன்படாது என்பதை இனக் கொலைகாரர்கள் தெரிந்தே ஆக வேண்டும். ஆதிக்க வெறி பிடித்து அரசாள்வோர் மக்கள் மீது அவிழ்த்து விடும் இராணுவ தர்பார்களையே சுதந்திர உலகம், அழிவுப் பாதையை நோக்கி வேகமாக விரையும் ஒரு நாட்டின் தலைவிதியான பயங்கர வரலாற்று மாற்றங்களுக்கு ஒப்பிட்டுக்காட்டுகின்றது.

—அடுத்த இதழில் முடியும்

---

## திரும்பி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடிகளுட்பட சுமார் 50 பேர் மாத்திரமே வந்திருந்தனர்.

அதே நேரத்தில் தமிழர் கூட்டணியின் தீர்மானப்படி அமைச்சருக்கு கறுப்புக் கொடி பிடித்து ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு 1500க்கு மேற்பட்ட தொண்டர்கள் இளைஞர்கள் அங்கு தயாராக காத்து இருந்தனர்.

மூன்று கட்டங்களில் வைத்து இக்கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. விமானத்தளத்தினுள்ளேயும், விமானத்தளத்திலிருந்து வரும்போது இருக்கும் முதலாவது வளைவிலும், வீதியிலுமாக, மூன்று இடங்களில் கூட்டணி இளைஞர்கள் திரண்டு நின்று அமைச்சருக்கு எதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அமைச்சரை வரவேற்க மாலையுடன் வந்திருந்த யாழ் பா. உ. திரு. சி எக்ஸ். மாட்டினையும் மற்றும் ஆளுங் கட்சிவால்பிடிகளையும் கண்ட மக்கள் ஆத்திரத்துடன் 'துரோகி' என்று கூச்சலிட்டனர். மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக, மந்திரிக்கு போடுவதற்கென கொண்டு வந்திருந்த மாலைகளைக்கூடப்போட முடியாது, சுருங்கிய முகத்துடன் அவற்றைத் திருப்பிக் கொண்டு செல்லவேண்டிய நிலை மாட்டினருக்கு ஏற்பட்டது.

தமிழர் கூட்டணியின் சார்பில் தமிழ் மக்கள் நடத்திய இந்த பிரமாண்டமான கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தைக் கண்ட, அமைச்சரும் அவருடன் வந்தவர்களும் நாடி தளர்ந்து, முகம் கறுத்து, அங்கிருந்து மளமளவென்று நழுவிச்சென்றனர். விமான நிலையத்தில் அமைச்சர்களுக்கு அளிக்கப்படவிருந்த வரவேற்பை முற்றாக கைவிடவேண்டிய நிலை அரசாங்க ஆதரவாளர்களுக்கு ஏற்பட்டது!

கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தையொட்டி ஆயுதந்தாங்கிய பொலிஸ் காவல் விமான நிலையத்தில் போடப்பட்டிருந்தது.

இக்கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில், திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், தா. திருநாவுக்கரசு, அ. அமிர்தலிங்கம், ஈ. மு[illegible]ஜயக்கொடி, பண்டிதர் இரத்தினம் வி. தர்மலிங்கம், சி. கதிரவேற்பிள்ளை, வழக்கறிஞர் குமரகுரு, சு. நடராசா உட்பட பல தலைவர்களும் கலந்து கொண்டனர்.

மக்கள் பகிஷ்கரித்தனர்.

இலதபாடுந்து, அமைச்சர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் அனைத்தையும் பொது மக்கள் பகிஷ்கரித்தனர்.

மாதகலில் ஒரு கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சருடன் தந்தை செல்வாவும் கலந்துகொள்வதாக யாரோ விஷமிகளால் பொய் [illegible] வெளியிடப்பட்டதை தமிழர் கூட்டணி [illegible]த்து, மறுப்புத்தெரிவித்துள்ளது.

---

## அரிசி விலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர், யாழ் நகருக்கு முதன்முதலாகவரும் முக்கியமான அமைச்சராகடாக்டர் என். எம். பெரேரா இருப்பதாலும், அரிசிவிலை, மற்றும் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு நிதியமைச்சரே பொறுப்பாக இருப்பதாலும் தவறான முறையை புகுத்தி பல்லாயிரக்கணக்கான சிவல் தொழிலாளர்களின் வயிற்றில் நிதியமைச்சர் அடித்த காரணத்தாலும், டாக்டர் என். எம். பெரேரா யாழ் நகருக்கு வருகை தரும் மேபத் தாம் நாளை, துக்கநாளாக அனுட்டித்து தமிழ்மக்களின் எதிர்ப்பை சிறப்பாக அவருக்கு தெரியப்படுத்தவேண்டும் என்ற ஒரு கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஆராய்ந்து முடிவெடுக்க 4.3.73ல் நடவடிக்கை குழுவின் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## சிங்கள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தடை செய்கிறது. இச்சட்டத்தை மீறி தமிழைப் போதனா மொழியாகக் கொண்ட தனியான பாடசாலையொன்றை தமிழர் கூட்டணி நடத்தவுள்ளது.

இச்சட்டமறுப்பில் ஈடுபடுவதற்கான தொண்டர்கள் இப்போது திரட்டப்பட்டு வருகின்றனர்.

---

## அரியாலையில் அண்ணா விழா

தமிழுணர்ச்சியும், இனப்பற்றும் மிகுந்த அரியாலை தமிழர் கூட்டணி வாலிபர்களின் விடா முயற்சியினால் அண்ணா அஞ்சலி விழா, 25-2-73 அன்று அரியாலை ஸ்ரீ ஞான வயிரவர் ஆலய மைதானத்தில் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

செல்வன் ஆ. சிவராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் பேசுகையில்— 'அண்ணா ஓர் பழுத்த சமதர்மவாதியாக இருந்தும், இனமொழி உரிமைகளை ஒரு போதுமே விட்டுக்கொடுத்ததில்லையென்றும், சமதர்மம் பேசிய வேறு எந்த அகில இந்தியக்கட்சிகளிலும் சேராது இன அடிப்படையில் இயக்கத்தை நடத்திச் சென்றாரென்றும், அண்ணா வழியே நமது வழி யென்றும் கூறினார்.

மற்றும், திருவாளர்கள் எஸ். சி. மகாதேவா, பி. நாகராசா அடலேறு ஆலாலசுந்தரம், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், திருமதி, மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு, ஆகியோரும் உரையாற்றினர்.

---

## தமிழினம்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நின்று மிச்சத்தைப் புசிக்கின்ற நாய்க்கும் எகசில இலை இல்லை. இந்த நிலையைத் தமிழினம் தன்குணர்ந்து எமது இனம் தரணியில் தலை நிமிர்ந்து வாழ சுதந்திரம் பெற்ற இனமாக வாழ ஒன்று சேர்ந்துழைப்போம். இவ்வாறு கதிரவேலுப் பிள்ளை குறிப்பிட்டார். மற்றும் மு. மாணிக்கம், சு. நடராசா, சி. நாகராசா, மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

---

காங்கேசன்துறையில்

## தமிழரசு மாநாடு!

அரசாங்கம் விவசாயிகளுக்கு ஏற்படுத்தியிருக்கும் கெடுபிடிகளின் காரணமாக கிளிநொச்சியில் மே மாதத்திற்கிடையில் மாநாட்டை வைப்பதில் பிரச்சினைகள் வரும் என்பதைஎதிர்நோக்கி 12 வது மாநில மாநாட்டை இன்றுள்ள அரசியல் நிலை காரணமாகவும், எதிர்வரும் இடைத்தேர்தலில் எழுச்சியை உருவாக்கும் நோக்கத்துடனும் காங்கேசன் துறைத் தொகுதியில் மே மாதத்தில் வைப்பதென தமிழரசுப்பொதுச்சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க திருவாளர்கள் சு. நடராசா, அ. குமரகுரு, சோ. சேனாதிராசா ஆகியோரைக் கொண்ட வரவேற்புக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

---

## வட்டுக்கோட்டை தமிழரசுக்கிளை முன்னாள் தலைவர் மறைவு!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைக்கிளையின் முன்னால் தலைவரும் தமிழரசுக்கட்சியின் உறுதியான தொண்டர்களில் ஒருவருமான திரு. மு. வன்னியசிங்கம் அவர்கள் சென்ற 26.2.73 அன்று காலமானார்.

அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறிய பின், தமிழரசுக்கட்சியில் சேர்ந்து வட்டுக்கோட்டை தமிழரசுக் கிளையின் தலைவராக இருந்து பொதுப்பணி ஆற்றிய இவர் சிறந்த தமிழபிமானியுமாவர்.

இவரது இறுதிச் சடங்கில் தமிழர் கூட்டணி பொதுச் செயலாளர் திரு அ. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

---

## பீட்டர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறும் கம்யூனிஸ்டுகள் இன்னும் ஆங்கிலத்தையே கட்டியழுகிறார்கள். ஆங்கிலத்துக்கு தரும் இடத்தைக் கூட தமிழுக்கு தர இவர்கள் விரும்புவதில்லை.

இதோ ஓர் உதாரணம்; பண்டாரநாயகா ஞாபகார்த்த மண்டபத்தை கட்டி முடித்த கம்யூனிஸ்ட் சீனத்தைச் சேர்ந்த கட்டடக் கலைஞர்களைப் பாராட்டுவதற்காக 'திரிபுவாதி' என சிலக்கம்யூனிஸ்டுகளால் தாக்கப்படும் பீட்டர்கெனமன், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் என்ற முறையில் ஓர் கலாசார நாடகத்தை நவரங்க கலா மண்டபத்தில் நடத்தினார். இந்த நாடகம், 23-2-73 வெள்ளிக்கிழமை 6-30 மணிக்கு நடைபெற்றது. இதற்கான அழைப்பிதழ்கள் பீட்டர்கெனமனின் பெயரில் அனுப்பப்பட்டன.

ஆனால் இந்த அழைப்பிதழில் சிங்களத்துக்கும் ஆங்கிலத்துக்கும் மட்டுமே இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழுக்கு மருந்தளவும் இடம் தரப்படவில்லை, ஆங்கிலத்துக்கு தரப்பட்டுள்ள இடத்தைக்கூட, இந்நாட்டு மொழிகளில் ஒன்றான தமிழுக்கு தரவிரும்பவில்லை பீட்டர் கெனமன்!

இப்படிப்பட்டவர் தான் இவ்வாரம் யாழ் நகர் வருகிறார் — பொய் புளுகு மூட்டைகளை அவிழ்த்து விட! கொழும்பில் அதுவும் அவரது அமைச்சிலேயே தமிழை ஒதுக்கிவிட்டு, யாழ்ப்பாணத்தில் நின்று கொக்கரிக்க வருகிறார்! வி. பொன்னம்பலமும் மற்றும் கம்யூனிஸ்ட் குஞ்சுகளும், கம்யூனிஸ்ட் அமைச்சரின் இத் தமிழ் ஒழிப்புக்கு என்ன சமாதானம் கூறப்போகிறார்கள் என்று கேட்கின்றனர் மக்கள்!

---


முக்கிய அறிவித்தல்

மில்க்வைற் நீலசோப் போல் வேறு சோப்புகள் விற்பனைக்கு வருவதால் மில்க்வைற் நீலசோப் மேலுறைகளைக் கவனித்து வாங்குங்கள். இதன் மூலமே நீங்கள் உண்மையான மில்க்வைற் நீலசோப்பைப் பெற்று பயன் அடைய முடியும்.

மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை சேகரித்து அனுப்பி உயரிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பெரும்பான்மை என்ற திமிருடன் நினைத்ததை எல்லாம் நடத்தப் பார்க்கிருர்கள் சிங்கள ஆட்சியினர்!'

## காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தாமலிருப்பது சனநாயக படுகொலை!

### மல்லாகத்தில் செல்வா கண்டனம்!

"ஈழத்தைப் பொறுத்த வரையில் என்றுமில்லாதவொரு பெரிய இக்கட்டான கால கட்டத்திலே தான் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ருர்கள். வாழ்க்கைச் செலவுப்பிரச்சினை ஒருபுறமும், அரசின் தன்னிச்சையான போக்கினுல் மறுபுறமும் நெருக்கடி உருவாகி வருவதைக் காணலாம். நிலைமை இப்படிஇருக்கும்போது அரசாங்கம் ஜனநாயகமென்று கூக்குரல் போட்டுக்கொண்டு காலத்தைக் கழிக்கின்றதேயன்றி, ஆக்கபூர்வமான வேலைகளைச் செய்து, இனங்களுக்கிடையே நல்லுறவை வளர்த்து நாட்டை நல்லதொரு சுபீட்சமான நிலைக்கு இட்டுச்செல்வதற்குத் தயங்குகின்றது".

இவ்வாறு பெரியவர் தந்தை செல்வா அவர்கள், மல்லாகம் நீதிமன்றத்திற் கருகாமையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கலந்து கொண்டு சொற்பெருக்காற்றுகையில் குறிப்பிட்டார். அண்ணு அறிவகத்தின் சார்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பெரியவர் செல்வா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:—

காங்கேசன்துறை தொகுதிக்குப் பிரதிநிதியாக இருந்தவர் இன்று பதவியைத் துறந்தது ஏன் என்பதை நாட்டுமக்கள் நன்கறிவார்கள். ஒருதொகுதியின் பிரதிநிதியாக இருப்பவர் இராசினுமாச் செய்துவிட்டால் குறிப்பிட்ட கால எல்லையினுள் இடைத்தேர்தலை நடத்துவதுதான் எந்தநாட்டிலுமுள்ள ஜனநாயகமரபு! ஆனுல் எமது நாட்டிலோ நிலைமை அப்படியில்லை! இராசினுமாக்கடிதம் சமர்ப்பித்து இற்றைவரையிலும் இடைத்தேர்தலை நடாத்துவதற்கு அரசாங்கம் தயாராகவில்லை. நாம் பல தடவைகளில் அரசாங்கத்தை வற்புறுத்தியும் வீணுகக்காலத்தைக் கடத்துவது ஏன்?

தமிழ் மக்களில் கணிசமான தொகையினர் தங்களது அரசியல் திட்டத்தினை ஏற்றிருப்பதாகக் கூறிக்கொள்ளும் அரசினர் உடனடியாக இடைத்தேர்தலை நடாத்திப் பார்க்கட்டும் குறித்ததேர்தலில் அரசு ஒரு வேட்பாளரை நிறுத்தட்டும் தமிழர் கூட்டணியும் ஒரு வேட்பாளரை நிறுத்தும். யார் வெற்றி பெறுகின்ருர்களோ அதைக் கொண்டுதான் உண்மையான நிலையினைக் காணலாம். கூட்டணி வேட்பாளர் தோற்ருல் எமது கொள்கைகளை விட்டு விடுவோம், அரசின் வேட்பாளர் தோற்ருல் உடனடியாக அரசியல் திட்டத்தினைத் திருத்த வேண்டும்.

இனியும் அரசு இடைத்தேர்தலை நடாத்துவதற்குத் தயங்குகின்ற காரணத்தை நாட்டுமக்கள் நன்குணர்ந்து கொள்வார்கள். தாங்கள் பெரும்பான்மையான ஆதிக்கம் பெற்ற காரணத்தினுல் நினைத்ததையெல்லாம் செய்கின்ருர்கள். தேர்தல் எப்பொழுது வருகின்றதோ அந்நேரத்திலேதான் இதற்கான



பதிலை மக்கள் கொடுக்க வேண்டும்.

அடுத்து சு. நடராசா உரையாற்றுகையில் கூறியதாவது:- அரசாங்கம் தமிழுக்கு உரிய இடத்தை அளித்திருக்கின்றதென்றும், அது தமிழ் மக்களைப்புறக்கணிக்காது என்றும் "வானுப்போனு" போன்ருேர் கூறுகின்ருர்கள். உண்மையில் அப்படியொரு நிலையை அரசாங்கம் ஏற்படுத்தமுயன்ருல் அல்லது சாதித்துக்காட்டினுல் நாம் "வானுப்போனு"வையே அனுப்புவதற்குத் தயார்! யார்குத்தியும் அரிசியாகவேண்டும் தமிழினத்தின் உரிமைகளைப் பெற்றுத்தர யார் முன்வந்தாலும் நாம் அவர்களை வரவேற்போம் தமிழினம் சிங்களத்தையும் சிங்கள இனம் தமிழையும் படித்து விட்டால் பிரச்சினைகள் தீர்ந்து விடுமென்றும் சிலர் கூறுகின்ருர்கள். இப்படிக் கூறுபவர்கள் இதனது உண்மை நிலையினையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாம் சிங்களத்தைப் படிக்கத்தயாரென்ருல் தமிழைப் படிக்க சிங்களவர் தயாராக இருக்கின்ருர்களா? கோட்டு மொழி விவகாரத்தில் நீதிக்குப்பதிலாக துரோகமே இழைக்கப்பட்டிருக்கின்றது: கோட்டுமொழி விடயத்தில் தமிழுக்கு உரிய இடமளிக்கப்பட்டிருப்பதாக "வானுப்போனு" கூறுகின்ருர்; அவருக்கு சட்டம் தெரியாது! சட்டத்தை நன்கு விளங்கிக் கொள்ளும் திறமை அவருக்கிருந்திருந்தால் இப்படிக் கூறமாட்டாரர்.

துறைமுகத்திற் கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில்சிங்களக் குடியேற்றம் வேறு நடைபெறுவதற்கு அரசாங்கம் சகல உதவிகளையும் வழங்குகின்றது. சிங்களப் பகுதிகளில் தமிழர் வீட்டை வாங்கி வசிப்பதைப் போல சிங்களவரும் இங்கு காணியை வாங்கி வாழட்டும்! ஆனுல் இன்று நடப்பது அரசாங்கம் மறைமுகமாக உதவியளித்து சிங்களவருக்கு ஆதிக்கத்தைப் பெற்றுக் கொடுப்பதுதான்... இந்த நிலையைத்தான் நாம் எதிர்க்கின்றோம். குறித்த விடயத்தில் "வானுப் போனு" எப்படி நடந்துகொள்கின்ருரென்பதையும் தமிழினம் நன்குணரவேண்டும். நடக்கவிருக்கும் இடைத்தேர்தல் அனைத்திற்கும் ஒரு பாடத்தைபுகட்டவேண்டும், இவ்வாறு நடாபேசினுர் — மற்றும், மு. திருநாவுக்கரசு, வி. தர்மலிங்கம், சிவப்பிரகாசம் உட்படப் பலர் உரை நிகழ்த்தினுர்கள்.

("வண்ணை நிருபர் சண்")

## 'தமிழினம் சுதந்திர இனமாக வாழ வேண்டும் என்பதே பேரறிஞர் அண்ணுவின் கொள்கை!



### அக்கொள்கை வெற்றிபெறப் போராடுவோம்!'

### கொக்குவில் அண்ணு விழாவில் கோப்பாய் பா. உ.

'உலகில் வாழ்கின்ற எந்த இனமும் எல்லாக் காலமும் அடிமைப்பட்டிருக்க முடியாது. கடந்தகால சரித்திரத்தைப் புரட்டினுல், காலத்திற்குக்காலம் அடிமைப்பட்டிருந்த இனங்கள் தங்கள் உரிமைகளை போராடித்தான் பெற்றிருக்கின்ருர்கள் மனிதன் ஒரு சமுதாயமாக வாழும் போது சுதந்திரம் பெற்ற இனமாகத்தான் வாழவேண்டும். எந்த மொழிபேசுமினம் தனது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டாது விடில் அந்த சமுதாயமே அழிந்துவிடும். தமிழன் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் சுதந்திரம் பெற்ற இனமாக வாழவேண்டுமென்று பேரறிஞர் அண்ணு அவர்கள் இடித்துரைத்தது இந்த ஒரே யொரு காரணத்திற்காகவே யென்பதை தமிழினம் நன்குணர்ந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு போப்பாய் தேசியப்பேரவை உறுப்பினர். திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்கள் கொக்குவிலில் நடைபெற்ற அண்ணு நினைவு விழாவில் உரையாற்றும் போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

கடந்த ஒரு நூற்ருண்டுக்கு முன்னர் இலங்கையில வாழும் இரு இனங்களும் தனித்தனி அரசுகளாகத் தான் ஆட்சிபுரிந்தன... தமிழ் இராச்சியத்தைப் போர்த்துக்கேயர் அடிமைப் படுத்திய அந்த வேளையில் தமிழருக்காக உதவ சிங்கள அரசு முன்வரவில்லை. இலங்கை ஒரு நாடு தானென்று அப்பொழுது யாரும் கருதியிருக்கவில்லை. இருநாடுகளாகத்தான் ஆட்சி நடாத்தப்பட்டது. ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்ததும் இந்தியாவிலிருந்து தொழிலாளரைக் கொண்டு வந்து மலைநாட்டில் வேலைக்கு அமர்த்தினுர்கள்.

ஆங்கிலேயர் இலங்கையை விட்டுப்புறப்படும் போது இரு இனமும் ஒருங்கு சேர்ந்து வாழக்கூடிய ஒரு அரசியலமைப்பு ஏற்படுமென்றுதான் அனைவரும் நம்பினுர்கள். ஆனுல் கிடைத்த சுதந்திரம் சிங்களவர் மாத்திரம் அனுபவிக்கக் கூடியதாகவும், தமிழர் அடிமைப்படுத்தப்பட்டவொரு இனமாகவும் வாழ வழி அமைத்து விட்டது. [illegible] வாரமே! சுதந்திரம் என்பது தன்னைத்தான் ஆழுவது. மற்றவர்கள் ஆட்சி நடாத்த அதன்கீழ் அடிமைப்பட்டிருப்பது சுதந்திரமா? தமிழினத்திற்கு தன்னைத்தான் ஆழக்கூடிய சுதந்திரம் இலங்கையில்லை. எம்மை அடக்கி ஒடுக்கி வாழ்கின்றது சிங்கள அரசு.

எனவேதான் இன்று இரண்டு சிந்தனைகள் தமிழ் மக்களுக்கு வேண்டும். ஒன்று; தனது மொழி சிதைந்து அழிந்துபோவதைத் தடுத்து நிறுத்தி, ஆழுகின்றவொரு நிலைக்கு உயர்த்த உழைக்க வேண்டும். இரண்டு, ஒவ்வொருவருக்கும் பொறுப்பும், கடமையுணர்வும் ஏற்படவேண்டும். அரசியல் போக்கிரிகளின் புகலிடமென்று சிலர் விட்டு விலகி விடுகின்ருர்கள். அவர்கள் கடமையிலிருந்தும் பொறுப்பிலிருந்தும் தவறிவிடுகின்ருர்கள், காந்தி அண்ணல் சொன்னுர், அரசியல் என்பது அறம்! அது ஆத்மீகத்திலிருந்துதான் பிறக்கின்றதென்று! அறத்தின் அடிப்படை ஆத்மீகமேயன்றி அதிகாரமல்ல... ஆத்மீகத்துடன் அரசியலை இணைக்கவேண்டும். அரசியல் இயக்கத்தின் மூலம் நீதியையும் நியாயத்தையும் நிலை நாட்ட உழைக்கவேண்டும். போக்கிரிகளின புகலிடமென்று கூறி ஒதுங்கிவிட்டால், அதுவும் நல்லவர்கள அரசியலிலிருந்து விலகிவிட்டால் கெட்டவர்கள்தான் அரசியலில் வந்து புகுந்து கொள்வார்கள். நாம் கடமையுணர்ச்சியிலிருந்து விலகிவிட்டால் கெட்டவர்களின் ஆட்சிதான் அதற்கு தண்டனையாக வந்து கிடைக்கும். இதனைத்தான் தமிழ் மக்கள் சிந்தனைக்கெடுக்கவேண்டும். இன்று எம்மை ஆழுபவர்கள் ஒரு காலத்தில் எம்மிடம் ஆட்சியை ஒப்படைப்பார்கள்.

இன்று தங்களையே திருப்திப்படுத்த முடியாதவர்கள் எதிர்காலத்தில் எம்மையும் சேர்த்து வைத்துக்கொண்டு ஆட்சி நடாத்த முடியாதவொரு இக்கட்டான நிலைக்கு நிச்சயம் ஆளாகுவார்கள். அப்பொழுது அவர்கள் தங்களை மாத்திரமே பார்க்க நாம் பிரிந்துபோகவேண்டிய நிலைவரும். அத்தகைய நிலை வரும்போது நாம் ஆழக்கூடிய வொரு கடமையுணர்வு பெற்றவர்களாக இருக்கவேண்டும் எம்மிடையே அப்பொழுது பேதங்கள் பிளவுகள் இருக்கக்கூடாது. சாதியால்சமயத்தால் பிளவுபடாத ஒற்றுமைப்பட்டவொரு சமுதாயமாக நம்மைக்கட்டிக்காத்திட வேண்டும். சாதிஇல்லாத சமத்துவமே சுதந்திரமாகும். இன்று மேசையின் மீது அரிசி இல்லை. எஜமானின் மேசை காலியாகி விட்டது. எனவே ஈழே

(7-ம் பக்கம் பார்க்க)

## நாவலர் என்ருல் யார்? கதிர் விளக்கம்!

"தளபதி அமிர்தலிங்கம் அவர்கட்கு தமிழகத்தில் வைத்து நாவலர் என்ற பட்டம் சூட்டப்பட்டது, மந்திரி குமாரசூரியருக்கும் வேலணையில் வைத்து நாவலர் பட்டம் வழங்கியதாக அறிகின்றேன். இதுவிடயத்தில் எனக்கொரு சந்தேகம்...எனவே ஒரு பண்டிதரிடம் விளக்கம் கேட்டேன் அவர் பின்வருமாறு கூறினுர்...அதாவது செயல்திறனும் சொல் நாவன்மையும் படைத்த ஒருவர்தான் நாவலராக முடியும்! குமாரசூரியருக்கும் அப்பட்டம் பொருந்தும். ஏனெனில் இடத்துக்கிடம் நாவினைப்பிரட்டியும் வளைந்துவளைந்து கொடுத்து அரசுக்கு ஆதரவுதேடுவதிலும் நாவல்லவரான அவருக்கும் பொருந்துமென்று! உண்மையான நாவலன்யாரென்பதை மக்கள்தான் கண்டு பிடிக்க வேண்டும்."

— கொக்குவில் அண்ணு நினைவு விழாவில் கதிரவேற்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருஷியாவில் இருந்துவந்த இசைத்தட்டுக்கள் இளவாலை மக்களிடம் அவியாது பருப்பு!

மொஸ்கோவில் பனி பெய்தால் போர்வையை எடுப்பவர், மதிப்பிற்குரியவர், கிறீஸ்தவ மதத்தில் நல்ல பற்றுடையவராம், மக்களை மடையர்களாகக் கருதுகிருர்.

அண்மையில் ருஷியா சென்றிருந்த வ. பொ. வரப்போகும் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் கட்டுப்பணத்தை என்ருலும் கைப்பற்றிக்கொள்ளவேண்டுமே என்ற பேரவாவினுல் தமது தொகுதியில் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபட்டுள்ளார். மேலும் ருஷியாவில் இருந்துகொண்டு வந்த கத்தோலிக்க இசைத்தட்டுக்களையும், கத்தோலிக்க ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவிகளையும், கத்தோலிக்க கீர்த்தனை மாலைகளையும், இளவாலைக் கிறிஸ்து மதத்தினரிடம் இருந்து கூடுதலான வாக்குகளைப் பெறவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன், கத்தோலிக்க மதத்தலைவர்களுக்கும், போவோர், வருவோர், அனைவருக்கும், விநியோகித்து வருகின்ருர்.

இவைகளை இலவசமாகக் கொடுத்தாவது கத்தோலிக்க மக்கள் கம்யூனிசத்தின் மேலும் தன்மேலும் உள்ள வெறுப்பை ஓர் அளவிற்கு தணியவைக்கலாம், அதன் மூலம் தனது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம், என்ற ரீதியில் மதத்தை அரசியல் ஆக்கி, அதில் நின்று கூத்தாடுகிருர்.

காங்கேசன்துறைத் தொகுதிவாழ் கத்தோலிக்க மக்கள் குறிப்பாக இளவாலை கத்தோலிக்க மக்கள் ஏமாந்த கோமாளிகளல்ல, இசைத்தட்டுக்களையல்ல பறக்கும் தட்டுக்களைக்கூட ருஷியாவில் இருந்து கொண்டு வந்தாலும் கொப்புவிட்டு கொப்பு பாய்பவர்களல்ல. ஒரே குடையின்கீழ் ஒரே இலட்சியத்தோடு இருப்பவர்கள் என்பதை நண்பர் மறந்துவிட்டார்.

அண்மையில் நடந்த ருசிகரமான சம்பவமொன்று, இளவாலை மகளிர் மகாவித்தியாலத்திற்கு தனது ஒரே ஒரு தோழனுடன் சென்று அங்கு கடமையாற்றுவோருக்கு, கத்தோலிக்க இசைத்தட்டுக்களையும், ஒலிபதிவு செய்யப்பட்ட கருவிகளையும், கீர்த்தனை மாலைகளையும் விநியோகித்தாராம் வி. பி. இலவசமாகக் கொடுக்கும் போது யார்தான் விடுவார்கள், பாவம், இவைகளைக் கொடுத்துவிட்டு வீடுநோக்குகையில், பாடசாலையில் இருந்து வீடுசென்றுகொண்டிருந்த சிறுவர்கள் பாடிக் கொண்டு போனுர்களாம்.

''கொடுத்துக் கேட்கவேண்டும்
பிறர் கேட்டுக் கொடுத்திடாதே''

இப்படியாக பால் மணம் மாருத பச்சிளம் குழந்தைகளுக்குக்கூட, இவரின் இனிமையான இசைத்தட்டுக்களின் அரசியல் எவ்வளவிற்கு உச்சநிலையை அடைந்து இருக்கிறதென்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. ஆகவே இளவாலை மக்கள் சார்பில் நாம் கேட்டுக்கொள்வது இப்படியான சின்னத்தனமான வேலைகளால் மக்களை மாக்கள் என நினைத்து மாயவலை போட்டு மாற்றினுலும், அடுத்துவரும் இடைத்தேர்தல் தங்களுக்கு நல்லதொரு நற்சாட்சி பத்திரம் வழங்கும் என்பதை நாம் ஆணித்தரமாக, தெட்டத்தெளிவாக, வெட்டவெளிச்சமாக அறியத் தருகின்ருேம்.

—இளவாலையூரான்,
நீ. செபஸ்ரியாம்பிள்ளை

## மொழி, இன...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ழுக்கு நியாயமான அளவு உரிமை கொடுக்க வேண்டும் என்று பேசும் விந்தை எமக்கு தெரியாததல்ல. தமிழுக்கு நியாயமான அளவு நிர்வாக அந்தஸ்தை கொடுக்கவேண்டும் என்று கூறும் உங்கள் கட்சியினர் தெற்கே சென்றதும் அதை மறுப்பது ஏன்?

தமிழர்கூட்டணியினர் காந்தீயவாதிகள் என்று சொல்லிவிட்டு மொழி வெறியை வளர்ப்பது தவரும், தான் மார்க்சிய வாதியாம், தான் சொல்வதை செயலில் காட்டுபவராம், கயிறு திரிக்கிருர்.

திரு. வி. பொன்னம்பலம் அவர்களே! உங்கள் பேச்சுக்கும் உங்கள் செயலுக்கும் எப்போதாவது சின்னத் தொடர்பு ஆவது இருந்திருக்கின்றதா? இதுவரை இல்லை—இனியும் இருக்கும் என்று நம்புவதற்கில்லை.

தான் மார்க்சியவாதியாம். வி. பி. — ஒரு சந்தேகம் கார்ல் மார்க்ஸ், அரசமதமாக ஒருமதம் இருக்கவேண்டும அரசமொழியாக ஒருமொழி மட்டுமே இருக்கவேண்டும் மற்ற தேசிய மொழிகளும, மதங்களும் ஒதுக்கப்படவேண்டும் ஒருமொழிபாடப் புத்தகங்கள் மலிவாகவும் மற்ற மொழிப்பாடப் புத்தகம் அதிகவிலையாகவும் இருக்கவேண்டும். மணமகன் மனைவியிடம் சீதனம் வாங்கவேண்டும். என்றெல்லாம சொன்னுரா? அந்த புனித கார்ல் மார்க்சின் சிறந்த கொள்கைகளை குப்பைமேட்டில் ஏன் கொட்டுகிறீர்கள். இலங்கையில் சமவுடமைஏற்படுத்துவதற்கு இன்னும் தடையாக நிற்காதீர்கள்.

## வளர்மதி சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலைத் திறப்பு விழா

கல்முனை 2-ம் வட்டாரத்தில் 2.2.73ம் திகதி வெள்ளிக்கிழமை காலை எட்டு மணியளவில் வளர்மதி சன சமூக நிலையத்தால் ஆரம்பிகக்கப்பட்ட பாலர் பாடசாலையை அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசபைத் தலைவரும், சமாதான நீதிபதியும், இணக்கசபைத் தலைவரும், பிரபல சமூகசமயத் தொண்டரும், இளைப்பாறியதலைமை ஆசிரியருமான திரு. க. கணபதிப்பிள்ளை அவர்களால் சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப்பட்டது.

செல்வி. சாரதா மணியின் தேவாரபாராயணத் துடன் ஆரம்பமான இவ்விழாவில் பாலர்களுக்கு ஏடுகொடுத்து பிரசாதங்களும் வழங்கப்பட்டது. இதில் பாலர்களின் பெற்ருேரும், நிலைய அங்கத்தவர்களும், பொது மக்களும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

---

காங்கேசன் துறையில் தேர்தலில்போட்டியிடுவதற்காக தமிழ்மக்களை ஏமாளிகள் என்று கருதி கண்டதை எல்லாம்கக்காதீர்கள்! அவற்றின் மணம் தமிழ்மக்களால் சகிக்கக் கூடியதாக இல்லை. எனது ஆசிரியர் என்றமுறையிலே தங்கள் மேல் வைத்த மாசற்ற அன்பினுல் சொல்கிறேன் நீங்கள் வழிதவறிவிட்டீர்கள். நாடகத்தை உண்மை என்று கருதுகிறீர்கள். உங்கள் மயக்கம் இன்னும் நீடிக்கக்கூடாது. வந்துவிடுங்கள் எங்கள் பாசறைக்கு, செய்தவற்றை உணர்வுயிலேயே நினைத்து இருந்தினுல் மன்னிப்புக் கிடைக்காமலா போகும்?

## சிங்கள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உலுத்தர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. அடிமைகளாக வாழ்வோம், ஆடம்பரமாக வாழ்ந்திடுவோம் என்பதுதான் இந்த மகா போக்கிரிகளின் தாரக மந்திரமாகும். அல்லாவிடின் இப்படியொரு தீர்மானத்தினை நிறைவேற்றியிருப்பார்களா?

இந்தத் தமிழ்ச் சு. கட்சிகளுக்கெல்லாம் தலைவர் தான் இந்தக் குமாரசூரியர். இவரும் பின்கதவால்அமைச்சரான ஒரு பெருமகன். இந்தத்தலைவர், உப அஞ்சல் அலுவலகங்கள்திறப்பதிலும் தம் அடிவருடிகளை உப அஞ்சல் அலுவலக அதிபர்களாக நியமிப்பதிலும் பெருமை தேடிக்கொள்ளுவதிலும் மிகவும் திறமை வாய்ந்தவர்.

சிங்களச் சு. கட்சியின் தலைவியாம் சிறிமாவோ அம்மையாரின் தலைவன்தான் சிங்களம் மட்டுமே அரசகருமமொழியாக்கித் தமிழ் மக்களைத் தாழ்த்திய பெருமகன். அத்தோடு நின்றுவிடாது தமிழ்மக்களைத் குழிதோண்டிப்புதைக்கவும் அயராது அல்லும் பகலும் உழைத்த மகான் ... அத்தலையரிர ஜிறுநிமுடிவு,''ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்'' என்னும் முதுமொழியை நிறுவியது. இவ்வாருன தலைவனின் தலைவிக்கும் இத் தீர்மானம் பெரும் உவகை அளிக்கும் என்பது திண்ணம்.

தமிழரிடையே சந்தர்ப்பவசத்தால் தமிழராகப் பிறந்திட்ட இச் சந்தர்ப்பவாதிகளின் தீர்மானததை ஏற்றுத், தொடர்ந்து பணம் கறக்கவும், மக்களை ஏய்த்து வாழவும், தமக்கும் தமது வகுப்புவாத அரசுககும் தொடர்ந்து பாத பூசை செய்திடவும் இந்தச் சிங்கள அரசு சந்தர்ப்பம் அளித்திடினும் எவரும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனுல் தமிழ் மக்கள் துரோகிகளை இனம் கண்டு கொண்டு துரத்தியடித்துத் தூய்மை காத்திடத் துணிந்து விட்டார்கள் என்பதனை இந்தத் தமிழ்த் துரோகிகள் குறித்துக் கொள்ளட்டும்.

---

## தமிழ்மக்களின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

திரட்டவும் தமது நிலையை வெளி உலகத் தமிழர்கள் அறிந்து கொள்ளவும் எது விதமான வழியுமில்லையே எனத்துடித்துக் கொண்டிருக்கிருர்கள் இவர்கள். இப்படிப்பட்ட பிரமுகர்களை இது போன்ற மகாநாடுகளுக்கு அழைத்துக் கலந்துரையாடுவதன் மூலம் அவர்கள் பணிக்கு ஆக்கமும் ஊக்கவும் தரலாம்.

உதாரணமாக ரினிட்டாட் டோப்கோ தீவு எதிர்க்கட்சித்தலைவர் திரு. கிளிவோட் ராமச்சந்திரன், இந்தியாவுக்கான ரினிட்டாட் தூதுவர் திரு. சினன், பீஜீ நாட்டுத்தமிழ்ப் பிரமுகர் திரு அப்பாப்பிள்ளை போன்ருேரையும் தென்னுபிரிக்க மொறிசியஸிலிருந்து சில பிரமுகர்களையும் விசேட அழைப்பின் மூலம் மகாநாட்டுக்கு வரவழைக்கலாம்.

ஆராய்ச்சி மன்றத்தின் நடவடிக்கைகள் வெறும் பிரேத பரிசோதனையாக மட்டும் இருந்து விடக்கூடாது! அழிந்து போய்க் ... துக்கு வாழ்வளிக்கும் வகையையும் காணவேண்டும். தமிழினமும் தமிழ்மொழியும்

எப்படி கிரும் சிறப்புடனும் இருந்தன என்ற ஆராய்ச்சி முக்கியமான தொன்ருக இருக்கலாம்; ஆனுல் தமிழினமும் தமிழ்மொழியும் இனி எப்படி வாழவிருக்கிறது என்பது மிகமிக முக்கியமானது! இதுவும் இந்த 'டாக்டர்'களின் கடமையாக இருக்கவேண்டும் என்று பணிவுடம் வேண்டிக்கொள்கிறேன்.

# யாழ் உதவி முதல்வருக்கு குருநகரில் பெருவிழாவாம்

## குருநகரின் வீர இளைஞர் தடுப்புக்காவலில்!

யாழ் மாநகர 2-ம் வட்டார உறுப்பினர் ம. ச. பேரின்பநாயகம் உதவி முதல்வராகத்தெரிவு செய்யப்பட்டதைக் கௌரவிக்குமுகமாக ஒரு சில காக்கை வன்னியர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட வரவேற்பு விழா. 10.2.73சனிக்கிழமை குருநகர் கலை அரங்கத்திற்கு முன்பாகவுள்ள மைதானத்தில் பிரத்தியேக மேடை அமைக்கப்பட்டு நடைபெற்றது.—

அன்று மாலை 6 மணிக்கு பாங்சால் வீதியிலுள்ள உதவி முதல்வரின் இல்லத்தில் இருந்து ஆரம்பமாகிய ஊர்வலம் 50 பொது மக்களுடனும் 25 பொலிசாருடனும், மவுண்காமல் வீதி, தண்ணீர் தாங்கி 1-ம் குறுக்குவீதி, பாடசாலை வீதி வழியாக, ஊர்வலப்பாதையின் ¾ பகுதியை ஊர்வலம் கடந்த போதும் வீதிகளில் எதுவித தோரணமோ, மக்களோ இல்லாது வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன.

தொடர்ந்து ஊர்வலம் மத்தியமேற்கு வீதி, றெக்ளமேசன் 2-ம் குறுக்கு வீதி வழியாக. வரவேற்பு முன்றல் அடைந்தது இவ்வீதி வழியாக வரும் பொழுதும் சுமார் 50க்கு மேற்பட்ட வீடுகளின்வாயில்கள் இருந்த போதும் ஆக 9 வீடுகளுக்கு முன்னதாக தோரணங்கள் கட்டப்பட்டிருந்தது!

ஊர்வலம் வரும் பாதை நெடுகிலும்கூட்டமைதானத்தைச் சுற்றியுள்ள சுவர்களிலும், அரசாங்கத்தின் கொள்கையை தாக்கிய சுலோகங்களும், தமிழ்த் துரோகிகளே திரும்பிப் போங்கள் பொது மக்களே இவ்விழாவைப் பகிஷ்கரியுங்கள் என்றும் பல சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தது.

கூட்ட தினத்தன்று குருநகரின் வீர இளைஞர்கள் பலரிடம் குருநகர் பொலிஸ் அதிகாரி, நீங்கள் கூட்டம்குழப்புவீர்கள என்று செய்தி கிடைத்திருப்பதாகவும் அறிவித்தார. அதைத்தொடர்ந்து இளைஞர்கள் குருநகர் பொலிஸ் ஸ்ரேசனில் பொலிசாரின் கண்காணிப்பில் இருந்தனர். கூட்டம் முடிவடைந்தபின் வீட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந்த வரவேற்பு விழாவிலே மக்கள் தொகை 72 ஆகவும் பொலிசார் தொகை சுமார் 25 ஆகவும் பேச்சாளர் தொகை 15 ஆகவும் இருந்தது. ஆனுல் குருநகரில் இருந்து இந்த விழாவில் பேச்சாளர்களாகக் கலந்து கொள்வார்கள் என்று துண்டுப்பிரசுரம் மூலம், ஒலிபெருக்கி மூலமும் விளம்பரம் செய்யப்பட்ட நால்வரில் இருவர் விழாவைப் பகிஷ்கரித்தனர். மற்றும் இருவர் பேசவில்லை மொத்தத்தில் 99% இளைஞர்களும் குருநகர் மக்களும் இத்துரோகிகளின் விழாவைப்பகிஷ்கரித்தனர்.

# சவடால் பேர்வழி வி. பி.யே உமக்கு சவால் ஒரு கேடா?

சென்ற 15-2-73 தினபதி இதழில் முதலாம் பக்கத்தில் திரு. வி. பொன்னம்பலம் அவர்கள் இலங்கையின் முன்னுள் பிரதமர் டட்லி சேனநாயக்காவிற்கு ஒரு சவால் விடுத்திருக்கிருர். ''தமிழர் கூட்டணியின் ஆறு அம்சக் கோரிக்கைகளில் ஒன்றைத் தானும் திரு. டட்லி சேனநாயக்கா ஏற்ருல் தான் அரசியலில் இருந்து முற்ருக விலகத் தயார்'' என்று சவால் விடுத்தார்.

அரசுடன் இணைந்து நிற்கும் கட்சிகளில் ஒன்ருன கம்யூனிஸ்ட் கட்சியின் பிரமுகரான வி. பொன்னம்பலம் தன்னுலும், தனது கட்சியாலும் செய்ய முடியாததை தோல்வியைஒப்புக்கொண்ட அவர் அதை மறைக்க வேருருவரைச் சாடுவது விந்தையிலும் விந்தை. தமிழர் கூட்டணியினர் தமது ஆறு அம்சக் கோரிக்கைகளையும் அரசுக்கு அனுப்பியும் அவர்கள் அதைப்பற்றி இதுவரை எதுவும் பேசாது மௌனம் சாதிக்கிருர்கள்.

வடக்கு, கிழக்கு நீதிமன்றங்களில் தமிழ்மொழியைப் பாவிப்பதற்கு அரசாங்க வர்த்தமானியில் பிரகடனம் செய்தவர்கள் அதை ஏன் அரசியல் சட்டத்தில் எழுத மறுக்கிருர்கள்ஏமாற்றுகிருர்கள தமிழ மக்களை. இவை யாவும் தற்காலிகமே. காங்கேசன்துறை இடைத்தேர்தலை முன்னிட்டே இந்த திடீர் ஏற்பாடெல்லாம்.

வி. பொன்னம்பலம் தமிழ் மக்களுக்கு நன்மை செய்வதாகவும் தமிழுக்குரிய இடம் கொடுத்ததாகவும் கூறுவதானுல் தமிழருக்குரிய உரிமைகளை அரசியல் சட்டத்தில் பதியுங்கள். வர்த்தமானியில் பிரகடனப்படுத்துவது போல பிரகடனப்படுத்தி பின் அவற்றைப் பறியாதீர்கள். இப்படி மக்களை ஏமாற்ருதீர். செய்யவேண்டியவற்றை முறைப்படி அரசியல் சட்டத்தில் இடம்பெறச் செய்து தமிழுக்குரிய இடத்தை நீங்கள் வழங்கினுல் எதிர்வரும் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் உங்களை போட்டியின்றி அனுப்பத்தயார். செய்வீரா?

யூ. என். பி. ஆட்சியின் போது இருந்த உரிமைகள், சலுகைகள்கூட இன்று தமிழ் மக்களுக்கு உங்கள் ஆட்சியில் இல்லையே. திரு. டட்லி சேனநாயகா செய்ததில் நூறில் ஒரு பங்குகூட உங்களால் செய்யமுடியவில்லையே. அதுவும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலத்தில்.

பின் ஏன் வீணுக சவால் விடுகிறீர்கள்.

## கே. சிறீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைச் சபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப்பதிவு செய்யப்பட்டது


உத்தரவின்றி உள்ளே வா

7வது வாரம்

செல்லமகால்

ரவிச்சந்திரன்,
காஞ்சனா,
நாகேஷ்,
—நடித்த—
( ஈஸ்ட்மன் கலர் )

செல்லமகால்

வின்சர் (யாழ்நகர்) இம்பீரியல் (மட்டுநகர்)

வெகு விரைவில்





8 - வது ஜனத்திரள் வாரம்!



கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

நடிகர் திலகம் சிவாஜிகணேசன், வாணிஸ்ரீ,

—நடித்த—

வசந்தமாளிகை

(ஈஸ்ட்மென் கலர்)

9ம் திகதி வெள்ளி முதல் கிங்ஸ்லி திரையில்

என். டி. ராமராவ், ஜெயலலிதா, நடித்த அடிமையின் காதல்

டைரக்ஷன்:— யோகா னந்.

2வது மகத்தான மக்கள் வாரம்!



சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ் நகர்) கெஸினோ (மாத்தளை)

சிவாஜிகணேசன், சாரதா,
விஜயநிர்மலா, மனோரமா, சுந்தரராஜன்
வீ. கே. ராமசாமி, நடிக்கும்

ஞான ஒளி

டைரக்ஷன்:
பி. மாதவன் பீ. ஏ.

சென்னையில் 100 நாட்களுக்குமேல் ஓடிய மகத்தான திரையோவியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ... கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் மார்ச் மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.